Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 28 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 19 (12.01.2004) திங்கட்கிழமை இதழ் :103

ஹெனி
பல், மூக்குக் கண்ணாடியகம்
- கண் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக் கொள்ள
- உறுதியான பற்களைக் கட்டிக்கொள்ள
- மிதப்பு பற்களுக்கு கிளிப் செய்துகொள்ள

நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

கண்டி வீதி, சாவகச்சேரி.
பிரதான வீதி, பருத்தித்துறை
540, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

## கலைப்பணி ஆற்றிய கலைஞர்கள் தேசியத் தலைவரால் கௌரவிப்பு!

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழக மகளிர் பிரிவினரின் - நடன, நாடகக் கலைஞர்களுக்கு தேசியத் தலைவர் வே.பிரபாகரன் சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், கலை பண்பாட்டுக் கழக மகளிர் பொறுப்பாளர் மகேஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் நீண்ட காலமாக கலைப் பணியாற்றிய, பல நாடகங்கள், நடனங்களை நெறியாள்கை செய்த, தாயக ஊடகங் களில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் கடமையாற்றிய ஆசிரியை பேபிக்கு தேசியத் தலைவர் சிறப்பு விருது வழங்கிக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் தேசியத் தலைவர் கருத்துத் தெரிவிக்கும்போது -

"கலைப்படைப்புக்கள் அபார சக்தி வாய்ந்தவை, உணர்வுகளை எல்லோர் மனங்களிலும் ஆழமாகப் பதியவைப்பவை, நான் சிறுவனாக இருந்தபோது வீரபாண்டிய கட்டப்பொம்மன், சங்கிலியன் போன்றோரின் வரலாற்றை நாடகங்களாகவும் திரைப்படமாகவும் பார்த்தேன். இவையே எனது மனதில் அந்

(12 ஆம் பக்கம் பார்க்க)



கலைஞர் ஒருவருக்கு தேசியத் தலைவர் பிரபாகரன் விருது வழங்கிக் கௌரவிக்கிறார்

# புலிகளுடன் நேரடியாக பேச்சு நடத்த சுதந்திரக்கட்சி திரைமறைவு முயற்சி!

## தொடர்பை ஏற்படுத்த லண்டனில் மங்கள

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளுடன் நேரடிப்பேச்சுக்களை நடத்துவதற்காக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி புலிகளுடன் அதிகாரபூர்வ தொடர்புகளை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

சிறிலங்கா சுதந்திரக்கட்சி வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்டிருக்கும் இந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தற்போது லண்டனில் தங்கியிருக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மங்கள சமரவீர, புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

மங்களசமரவீர லண்டனிலிருந்து இன்று நாடு திரும்பத் திட்டமிட்டிருந்தபோதும், புலிகள் ஆதரவுக் குழுக்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்காக 17 ஆம் திகதி வரை அங்கேயே தங்கியிருக்க முடிவு செய்துள்ளார்.

அதிகாரமுள்ள எந்தத் தரப்புடனும் தாம் பேசத் தயாரென புலிகளின் அரசியல் ஆலோ

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புத்த மதத்தை அழிக்க நோர்வே முயற்சியாம்!

(கொழும்பு)

இலங்கையில் புத்த மதத்தை அழிக்கும் முயற்சியில் நோர்வே அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாக தேசிய பிக்குகள் முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

இது குறித்து தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவரான வண. எல்லாவெல மெதானந்த தேரோ மேலும் தெரிவிக்கையில்,

நோர்வே அரசாங்கத்தால் நடைமுறைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண மட்டத்திலான தேசிய அரசு; பிரதம மந்திரி ரணில் புதிய திட்டம்!

(கொழும்பு)

மாகாண மட்டத்தில் - தேசிய அரசாங்கம் ஒன்றை நிறுவுவது தொடர்பான திட்டமொன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ளார்.

மாகாண மட்டத்தில் உருவாக்கப்படும் தேசிய அரசாங்கத்திற்கு ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த இருவர் அமைச்சர்களாகத் தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்படுவர்.

இந்தத் திட்டத்தின்படி இரு கட்சிகளும் தனித்தனியாகவே தேர்தலில் போட்டியிடும். இவ்வாறு தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடையும் கட்சி எதிர்க்கட்சிக்குச் செல்லும்போது, அந்தக் கட்சியிலிருந்து இருவர் தெரிவு செய்யப்பட்டு இந்த மாகாண சபைக்குள் கொண்டு வரப்படுவர்.

இந்தத் திட்டம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ வாகன விபத்தில் குடும்பஸ்தர் பரிதாப மரணம்!

### கப்புதுவெளியில் சம்பவம்

கப்புதுவெளிப் பகுதியில் இராணுவ ட்ரக் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் பரிதாபகரமாக உயிரிழந்ததுடன், இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தில் நெல்லியடி கிழக்கைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சின்னத்துரை சிவனேஸ்வரன் (மனோகரன் - வயது 35) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நெல்லியடியிலிருந்து சாவகச்சேரி நோக்கி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களை ஜனாதிபதி சந்திரிகா சந்தித்தார்!

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல்களை எதிர்கொள்வது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று மாலை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் சப்ரகமுவ, வடமத்திய மாகாணங்களின் சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

வடமேல் மாகாண, தென் மாகாண ,மேல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தில் நம்பிக்கையீனம் இருந்தாலும் மக்களின் வாழ்க்கை இயல்புநிலைக்கு திருப்பம்!

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் சமாதான வேலைத் திட்டங்கள் வெற்றிகரமாக நடைபெறுவதில் சிலருக்கு நம்பிக்கை இல்லாதபோதும் இந்த வேலைத்திட்டத்தால் மக்களின் அன்றாட வாழ்க்கையை யதார்த்த நிலைக்கு கொண்டு வரமுடிந்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதும் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கி மக்களின் அன்றாட வாழ்க்கை இயல்பு நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
(சி-2009) email :- jaffna @ expoavi. com, reservations @ expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# தி.மு.கவுடனான கூட்டணி; பா.ம.க. இன்று அறிவிக்கும்!



பாரதீய ஜனதா கூட்டணியில் இருந்து தி.மு.க.விலகியதையடுத்து தமிழக அரசியலில் அணி மாற்றங் கள் .ஏற்பட்டுள்ளன.

ம.தி.மு.க.மத்திய மந்திரி சபை யில் இருந்தும் பாரதீய ஜனதா கூட டணியில் இருந்தும் விலகி தி.மு.க. அணியில் சேர்ந்து இருக்கிறது.

பா.ம.கவும், தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து வெளியேற வுள்ளது.

இது குறித்து முடிவுஎடுக்க பா. ம.கவின் அரசியல் ஆலோசனைக் குழுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு சென்னை அரசினர் தோட் டத்தில் உள்ள ஜி.கே.மணி இல் லத்தில் நடக்கி[illegible]. டொக்டர் ராம தாஸ் தலைமையில் நடக்கும் இக் கூட்டத்தில் அரசியல் விவகாரக் குழு உறுப்பினர்களின் கருத்துக்கள் ஆராயப்படவுள்ளன.

பாரதீய ஜனதாவுக்கும் அ.தி.மு. கவுக்கும் இடையே கூட்டணி ஏற் படும் சூழ்நிலை உருவாகி இருக் கிறது. அ.தி.மு.கவுடன் பாரதீய ஜனதா கூட்டு சேருவதை ராமதாஸ் எதிர்த்துள்ளார். எனவே அவர் தே. ஐ.கூட்டணியிலிருந்து வெளியேறு வது உறுதியென்று பா.ம.க. வட்டா ரங்கள் தெரிவித்தன.

தே.ஐ.கூட்டணியிலிருந்து வில கும் முடிவை எடுத்த பிறகு டாக்டர் ராமதாஸ் இன்றே தி.மு.க. தலைவர் கருணாநிதியை சந்தித்துப் பேசவுள் ளார்.

அதன் பிறகு இருவரும் கூட்டணி பற்றி அதிகார பூர்வமாக அறிவிப் பார்கள்.

தி.மு.க.கூட்டணியில் பா.ம. கவுக்கு 6 தொகுதிகள் ஒதுக்கப் படும் என்று தெரியவருகிறது.

## பாரதீய ஜனதாவுக்கு எதிராக

# மதச்சார்பற்ற கூட்டணி; வி.பி.சிங் கருணாநிதிக்கு வாழ்த்து


(சென்னை)

நாடாளுமன்றத் தேர்தலில் பா. ஜ.கவுக்கு எதிராக மிகப்பெரும் மதச்சார்பற்ற கூட்டணியை உரு வாக்க முயற்சி மேற்கொண்டுள்ள தற்காக தி.மு.க.தலைவர் கருணா நிதிக்கு முன்னாள் பிரதமர் வி.பி.சிங் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

மண்டல் கொமிசன் பரிந்துரை களை அமுலாக்கியதால் ஆட் சியை இழந்த முன்னாள் பிரதமர் வி.பி.சிங் தி.மு.க.தலைவர் கருணா நிதியை தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு பாராட்டைத் தெரி வித்தார்.

பா.ஜ.கவுக்கு எதிராக தி.மு.க. அமைத்துள்ள மதச்சார்பற்ற கூட்ட ணிக்கு மாபெரும் வெற்றி கிடைக் கும் என்று நிச்சயமாக தான் நம்புவ தாகவும் கருணாநிதியிடம் அவர் தெரிவித்தார் என தி.மு.க. செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# 6, 000 பொலிஸ் பாதுகாப்பில் பா.ஜ வின் பொதுக்கூட்டம்!



ஆந்திர மாநிலம் ஹைதராபாத் தில் நேற்று மாலை நடந்த பா. ஜனதா பொதுக்கூட்டத்தில் பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் அத் வானி ஆகியோர் கலந்துகொண்டு பேசினர்.


இஸட் பிளஸ் பாதுகாப்புக் கொண்ட 15 இற்கும் மேற்பட்ட தலைவர்கள் கலந்துகொள்வதால், அந்த மாநாட்டுக்கு பலத்த பாது காப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந் தன.

பொதுக்கூட்ட மேடைக்கு அருகே 6 ஆயிரம் பொலிஸார் குவிக்கப் பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபடுத் தப்பட்டனர். மேலும் கூடுதல் கமிஷ னர் 8 பொலிஸ் அத்தியட்சகர் ஆகி யோரும் மேடைக்கு அருகே பாது காப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். எங்கும் துப்பாக்கி ஏந்திய பொலி ஸாரே தென்பட்டனர். ராஜ்பவனில் இருந்து வைஸ்ராய் ஓட்டல்வரை துப்பாக்கி ஏந்திய பொலிஸார் பாது காப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந் தனர்.

பொதுக்கூட்டம் நடைபெற்ற இடத்தில் மோப்ப நாய்கள் மற்றும் வெடிகுண்டு நிபுணர் குழுக்கள் ஒவ் வொரு அங்குலம் அங்குலமாக பரிசோதனை செய்தனர்.

பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வந்தவர்கள் பரிசோதித்து 40 மெட்டல் டிடெக்டர் கருவிகள் அமைக்கப்பட்டு சோதனை செய்யப் பட்டனர். முக்கிய வீதிகளில் இலத் திரனியல் கமெரா பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டது. பாதுகாப்பு கெடுபிடி மிக்க கூட்டமாக இந்தக் கூட்டம் நடைபெற்றது குறிப்பிடத்தக் கது.

# ஆந்திர மாநில சட்டசபைத் தேர்தலில் தெலுங்கு தேசத்துக்கு வெற்றிவாய்ப்பு



(சென்னை)

ஆந்திர மாநில சட்டசபைத் தேர் தலில் எந்தக் கட்சிக்கு வெற்றி வாய்ப்பு அதிகமாக இருக்கிறது என்று டெக்கான் ஹெரால்ட் கருத் துக்கணிப்பு ஒன்றை நடாத்தியது.


கடந்த டிசெம்பர் மாதம் 2 ஆவது வாரத்தில் 147 சட்டசபை தொகு திகளில், ஒவ்வொரு தொகுதியிலும் தலா 100 வாக்காளர்களிடம் கருத் துக் கணிப்பு நடாத்தப்பட்டது. அதில் வெளியான தகவல் வருமாறு,

ஆந்திர மாநிலத்தில் உள்ள 294 சட்டசபைத் தொகுதிகளில் 183 தொகுதிகளில் தெலுங்கு தேசம் தனிப்பட்ட முறையில் வெற்றி பெறும், பாரதீய ஜனதாக் கட்சிக் கூட்டணியுடன் சேர்ந்து 196 தொகு திகளை தெலுங்கு தேசம் கைப் பற்றும். 45 சதவீத மக்கள் தெலுங்கு தேசம் கட்சி வெற்றிபெறுவதையே விரும்புகிறார்கள். இதற்குக் காரணம் சந்திரபாபு நாயுடுவின் - ஒரு கோடி ரூபா அன்பளிப்புத் திட்டம் ஆந்திர மக்களை பெரிதும் கவர்ந்துள்ளாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் - மத்திய அரசு பல திட்டங்களை அறிவித்துள்ளது. இது அனைத்துப்பிரிவு மக்களையும் போய்ச் சேர்ந்துள்ளதால், தெலுங்கு தேசம்-பாரதீய ஜனதாக் கூட்டணி ஆந்திரா வில் மிகவும் பலம் வாய்ந்ததாக உள்ளன.

காங்கிரஸ் கட்சி தனியாகப் போட்டியிட்டால் 80 இடங்களில் வெற்றி பெறும். காங்கிரஸ் - தெலுங் கானா ராஷ்ட்ர சமதி கூட்டணி அமைந்தால் 125 இடங்கள் கிடைக் கும். காங்கிரஸ் - இடதுசாரிக் கட்சி கூட்டணி அமைந்தால் 97 தொகுதி களில் வெற்றி பெறும். இது இல்லா மல் - காங்கிரஸ், இடது சாரிக்கட்சி கள், தெலுங்கானா, ராஷ்ட்ர சமதி கட்சிகளின் கூட்டணி அமைந்தால் 135 தொகுதிகளும் கிடைக்கும்.

அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்று சேர்ந்து கூட்டணி அமைத் தாலும், சந்திரபாபு நாயுடுவின் திட்டங்களுக்கு ஈடுகொடுக்க முடியா தபடி 2 ஆவது இடத்தில் இருக்கும் எனத் தெரியவந்துள்ளது.





சென்னையில் நடைபெற்ற நாய்களின் கண்காட்சியில் - பங்கெடுத்த சில இன நாய்களையும், சிறுமியொருத்தி தனது நாயுடன் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்

# பா.ஜ.க. தேசிய செயற்குழுக் கூட்டம் ஹைதராபாத்தில் நேற்று ஆரம்பம்!


(புதுடில்லி)

இந்திய நாடாளுமன்றத்திற்கு முன்கூட்டியே தேர்தல் நடத்துவது பற்றியும், தேர்தல் திகதி பற்றி முடிவு எடுக்கவும், தேர்தல் வியூகங்களை வகுக்கவும் பாரதீய ஜனதா தேசிய செயற்குழுக் கூட்டம் நேற்று ஹைதரா பாத் நகரில் ஆரம்பமாகியது. இந் தக்கூட்டம் இன்றும் தொடர்ந்தும் இடம்பெறும். ஹைதராபாத்தில் உள்ள வைஸ்ராய் ஹோட்டலில் நேற்றுத் தொடங்கியது.

நேற்றுக்காலை 10 மணிக்கு அந்தக்ஹோட்டலில் உள்ள மாநாட்டு மண்டபத்தில் இந்தக்கூட்டம் தொடங் கியது. பாரதீய ஜனதா தலைவர் வெங்கையா நாயுடு கூட்டத்தை தொடங்கிவைத்துப்பேசினார்.

இந்த கூட்டம் நடக்கும் அரங் கிற்கு மறைந்த பாரதீய ஜனதா முன்னாள் தலைவர் குஷபாவு தாக்கரே பெயர்சூட்டப்பட்டுள்ளது.

இந்த இரண்டுநாள் தேசிய செயற் குழுக்கூட்டத்தில் 200இற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். பிரதமர் வாஜ்பாய், துணைப்பிரதமர் அத்வானி, பாரதீய ஜனதா தலைவர் வெங்கையா நாயுடு கட்சியின் மாநி லத் தலைவர்கள், பாரதீய ஜனதா ஆளும் மாநில முதலமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள், தேசிய நிர் வாகிகள் இதில் கலந்துகொண்டனர்.



அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இந்த தேசிய செயற்குழுக் கூட்டத்தில் தேர்தல்கூட்டணி, கட்சி யின் வெற்றிக்கான வாய்ப்புகள், பொருளாதார சீர்திருத்த நடவடிக் கைள் உட்பட பல்வேறுவிடயங்கள் பற்றி ஆலோசிக்கப்பட்டது.

மாநாட்டை தொடக்கிவைத்து வெங்கையாநாயுடு பேசியதாவது,

நாடாளுமன்ற தேர்தலை சந் திக்க பாரதீய ஜனதா தயாராக இருக்கிறது. சமீபத்தில் நடந்த சட்ட சபை தேர்தல்களில் பாரதீய ஜனதா வுக்கு அமோக வெற்றி கிடைத்துள் ளது. இது சாதாரண வெற்றியல்ல. பாரதீய ஜனதாவின் நல்லாட்சிக்கு கிடைத்த வெற்றி. அதேபோல, காங் கிரசுக்கு ஏற்பட்ட தோல்வியும் சாதா ரண தோல்வியல்ல. நெருக்கடி நிலைக் குப்பிறகு, 1977 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலின்போது, சந்தித்த தோல்விக்கு நிகரானது இது.

பாரதீய ஜனதா மீது மக்க ளுக்கு ஏற்பட்டுள்ள நம்பிக்கையும் செல்வாக்கும் அதை மீண்டும் ஆட் சியில் அமர்த்தும். சோனியாவை பிரதமராக ஏற்றுக்கொள்ள மக்கள் தயாராக இல்லை.

இவ்வாறு வெங்கையா நாயுடு கூறினார்.

தேர்தல் திகதி பற்றி விவாதிக் கப்பட்டு, இன்று தேசிய செயற்குழுக் கூட்டத்தில் அரசியல் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்ப டும்.

நாடாளுமன்றத்துக்கு மார்ச் மாத இறுதியில் தேர்தல் நடத்தப்படலாம். பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் என்று பிரமோத் மகாஜன் கூறியி ருந்தாலும் இது தொடர்பாக கருத்து வேறுபாடுகளும் உள்ளன.

பிரதமர் வாஜ்பாயின் உதவியா ளர் ஒருவர் கூறும்போது, நாடாளு மன்றத்தை ஜனவரி 26 ஆம் திகதி குடியரசு தினத்துக்கு முன்னதாக கலைக்கக்கூடாது. ஜனவரி 29 ஆம் திகதி நடக்கும் போர் வீரர்கள் பாச றைக்கு திரும்பும் நிகழ்ச்சிக்கு முன்ன தாகவும் கலைக்கக்கூடாது.

பிரதமர் வாஜ்பாய் பெப்ரவரி முதல் வாரம் தாய்லாந்து செல்கி றார். 8 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதிவரை நடக்கும் ஆசிய நாடு கள் மாநாட்டில் அவர் கலந்துகொள் கிறார்.

அதில் காபந்து அரசின் பிரத மராக கலந்துகொள்வதை வாஜ்பாய் விரும்பவில்லை. அப்படி கலந்து கொள்வது முறையானதாக இருக் காது என்று தெரிவித்திருந்தார்.


எனவே இந்த அம்சங்கள் பற்றி யும் தேசிய செயற்குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

ராஜா யாழ்ப்பாணம்.
இன்றுமுதல்
சூர்யா, ஜோதிகா, ரம்யாகிருஷ்ணன் நடித்த
காக்க காக்க
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
பொங்கல் வெளியீடு - பிரசாந்தின்
ஜெய்
(சி-2005)

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜய், ஜோதிகா நடித்த
குஷி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
KEOMA
(சி-2004)

# புலிகள் தமது திட்டவரைபின் மூலம் அதிகாரத்தைப் பலப்படுத்துகிறார்கள்

## அமைச்சர் ஹக்கீம் குற்றச்சாட்டு



தமிழீழ விடுதலைப் புலிகள் - இடைக்காலத் திட்டவரைபின் மூலம் தமது அதிகாரத்தினைப் பலப்படுத்த முயல்கின்றனர் எனச் சந்தேகம் எழுவதாக, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு அமைச்சர் ஹக்கீம் வடமாகாண முஸ்லிம் அரசியல்வாதிகள், மதப்பெரியார்கள், புத்திஜீவிகள் ஆகியோருடன் கொழும்பிலுள்ள தமது உத்தயோகபூர்வ வாசஸ் தலத்தில் நடத்திய கலந்துரையாடலின்போது இவ்வாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வைக்கும் மாற்றுயோசனைகளில் வடமாகாண முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளும் உள்வாங்கப்பட்டு இடம்பெறச் செய்வதாக உறுதியளித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயாரித்துள்ள மாற்றுயோசனை தொடர்பாக வடமாகாண முஸ்லிம்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து, அதற்கான மாற்றுயோசனைகளை, தேவையான முறையில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக இந்தச் சந்திப்பு மேற்கொள்ளப்பட்டது. வடமாகாண முஸ்லிம்களின் சார்பில் 40 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

# நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட சில அரசியல் தலைவர்களே உள்ளனர்!

## ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டுக்காக அர்பணிப்புடன் செயல்படுகின்ற ஒரு சில அரசியல் தலைவர்களே இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற சந்திப்பின் போதே, ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் -

முன்னர் இருந்த அரசியல்வாதிகளுக்கு, தலைவர்களுக்கு இருக்கவேண்டிய குணாதிசயங்கள் அனைத்தும் இருந்தன. ஆனால், இப்போது அவ்வாறு இல்லை.

முன்பு அரசியலுக்கு வந்தவர்கள் எந்தத்துறைக்கும் தலைமை தாங்கக்கூடியவர்களாகக் காணப்பட்டனர். அவர்கள் தனிப்பட்ட தேவைகளைப் புறந்தள்ளி, நாட்டுக்காக சேவையாற்றுவதற்காகவே அர்ப்பணிப்புடன் செயல்பட்டனர்.

ஆனால், இன்று இவ்வாறான தலைமைத்துவத்தை வகிக்கக்கூடிய அரசியல்வாதிகளை தேடிப்பிடிப்பது பெரும் விடயமாக உள்ளது. நான் எண்ணுவதைப்போல் இப்பிரச்சினை நாட்டு மக்களுக்கு பெரும் பிரச்சினையாக இருக்கும் என நம்புகிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# அரசியற் கட்சி பிரமுகரை ஆயுததாரிகள் அச்சுறுத்தினர்!

## கொச்சிக்கடை பொலிஸில் முறைப்பாடு

(கொழும்பு)

அரசியல் கட்சி ஒன்றின் கிளைச் செயலாளரின் வீட்டுக்குள் புகுந்த ஆயுதம் தாங்கிய குழுவினர், வீட்டு உரிமையாளரை அச்சுறுத்திவிட்டு பொருட்கள் பலவற்றை சேதப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை திவடப்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

திவடப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள அரசியல் கட்சியின் கிளைச் செயலாளர் வீட்டுக்குள் புகுந்த ஆயுதம்தாங்கிய குழுவினர்கள் - வீட்டு உரிமையாளரான செயலாளரை அச்சுறுத்திவிட்டு, வீட்டு ஜன்னல்கள் உட்பட பல பொருட்களை சேதமாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இந்த விடயம் தொடர்பாக கொழும்பு கொச்சிக்கடைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தடைப்பட்டுள்ள சமாதான முயற்சி குறித்து கலந்துரையாடி தீர்வுகாணவேண்டும்!

## தேர்தலைக் கண்காணிக்கும் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிக்கு ஏற்பட்டுள்ள தடங்கல்கள் குறித்து சம்பந்தப்பட்டவர்கள் கலந்துரையாடித் தீர்வு காணவேண்டும்

இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'பவ்ரல்'.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அரசியல் தலைவர்கள் அனைவரும் தங்களுக்கிடையிலான வேறுபாடுகளை மறந்து, நாட்டின் நல்லாட்சியை உறுதிப்படுதத வேண்டும்.

சர்வதேச மதத்தியஸ்தம் உட்பட தங்களால் மேற்கொள்ளக்கூடிய அனைத்து முயற்சிகளையும் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

அரசாங்கத்துக்கும், எதிரணிக்குமிடையே தொடர்ச்சியான முட்டுக்கட்டு நிலையும், முரண்பாட்டு போக்கும் இருந்து வருவது ஆழ்ந்த கவலைக்குரியது.

விசேடமாக தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் குறித்து கவலைகொள்வதாக தெரிவிக்கும் இந்த அமைப்பு - இந்த நிலைமை காரணமாக நாட்டில் கொந்தளிப்பு ஏற்படலாம்.

இதன் காரணமாக அரசியல் தலைமைமீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்புணர்வு எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலின்போது வன்செயல்களுக்கு வழி வகுக்கலாம் எனவும் தெரிவித்துள்ளது

# நீதிமன்றங்களின் பாதுகாப்பு குறித்து அதிகளவு கவனம் செலுத்தப்படும்!

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்களின் பாதுகாப்பு நிலைமை குறித்து கவனம் செலுத்திவருவதாக, பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

பாதாள உலகக் கோஷ்டியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான தம்மிக அமரசிங்க கடந்த வெள்ளிக்கிழமை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தினையடுத்தே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை - இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்ட ஐந்து சந்தேக நபர்களைத் தாம் கைது செய்துள்ளதாக, கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவு பணிப்பாளர் சரத் போகொட தெரிவித்தார். இதற்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் உதவிகள் நாடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மீள் இணைந்த அதிகாரிகளுக்கு சம்பள அதிகரிப்பு இல்லையாம்!

## பொதுநிர்வாக அமைச்சு அறிக்கை

(கொழும்பு)

அரசசேவையில் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஓய்வுபெற்ற அரச அதிகாரிகளுக்கு இந்த வருடம் அதிகரிக்கப்பட்ட சம்பளம் வழங்கப்படமாட்டாது எனப் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இந்த அதிகாரிகளுக்குத் திருத்தியமைக்கப்பட்ட ஓய்வூதியம் வழங்கப்படும் என அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க கூட்டுத்தாபனம் மற்றும் அரசியல் அமைப்பு சபைக்கு கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டதற்கான அலோசனைகள் - திறைசேரியால் வெளியிடப்படும் என அமைச்சு விடுத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சம்பளமில்லாது விடுமுறையில் தொழில்புரியும் அதிகாரிகளுக்கு, இந்தச் சம்பளக் கொடுப்பனவு அதிகரிக்கப்படமாட்டாது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமைச்சர்களின் புதல்வர்கள் நட்சத்திர விடுதியில் மோதல்!

## இருவர் காயம், பொருட்கள் சேதம்!

(கொழும்பு)

ஐ.தே.மு அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களான எஸ்.பி.திசநாயக்க, மற்றும் மகிந்த விஜயசேகர ஆகியோரின் புதல்வர்கள் உட்பட பலா, மற்றுமோர் குழுவுடன் மேதலில் ஈடுபட்டனர்.

இந்தச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு ஐந்து நட்சத்திர விடுதி ஒன்றிலேயே நடைபெற்றது.

இந்த மோதலின்போது இருவர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த இருவரும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

மோதல்களில் ஈடுபட்டவர்களின் வாகனங்கள் பல சேதமடைந்துள்ளதுடன், களியாட்ட விடுதியில் பல பொருட்களும் சேதமடைந்துள்ளன.

களியாட்ட விடுதியில் காவல் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவரின் தொலைத் தொடர்பு சாதனம் பறிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த மோதல்கள் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார். (01)


# சிறிமாவோவின் சகோதரர் கொழும்பில் காலமானார்!

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் சகோதரரான முன்னாள் நீதிபதி பாரென் எஸ்.சி.ரத்வத்த கடந்த வெள்ளிக் கிழமை கொழும்பில் காலமானார்.

85 வயதான இவர் சமீபகாலமாக நோயுற்றிருந்தார். முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்க, சீவலி ரத்வத்த, மக்கி ரத்வத்த, கிளிபேட் ரத்வத்த ஆகியோரின் சகோதரரான இவர் 1983 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதியரவராகவும் பதவிவகித்து ஓய்வுபெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பாங்கொக் மாநாட்டில் ரணில் பங்குபற்றுவார்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாங்கொக்கில் அடுத்தமாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள பொருளாதார கூட்டமைப்பு மாநாட்டில் பங்கேற்கவுள்ளார்.

பாங்கொக்கில் நடைபெறும் இந்த மாநாட்டில் - பங்களாதேஷ், இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகளின் தலைவர்கள் பங்குபற்றவுள்ளனர். இந்த மாநாட்டில் பிரதமர் விசேட உரையாற்றவுள்ளதாக பிரதமரின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை, அடுத்தமாதம் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் மேற்படி நாடுகளின் செயலாளர் மட்ட மாநாடும் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பாதாள உலகத் தலைவர் கொலை

# கைதான சந்தேக நபரிடமிருந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம்!

(கொழும்பு)

கொழும்பில் நீதிமன்றம் ஒன்றில் வைத்து பாதாள உலகத் தலைவர்களில் ஒருவரான தம்மிக அமரசிங்கவைச் சுட்டுக்கொன்றவரிடமிருந்து கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸார் ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெற்றுள்ளனர்.

இந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் வேறொரு கொலை தொடர்பாகவே தம்மிக அமரசிங்கவை தாம் சுட்டதாக கொலையாளி தெரிவித்தார். ஆனால், இவரின் இந்த வாக்குமூலம் பொய்யெனவும், கிரிக்கெட் சபைத் தலைவர் திலங்க சுமதிபாலவின் வழக்குடன் தொடர்புடையதாகவே இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாமெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை நான்கு கைதிகளும், நான்கு பொலிஸாரும் நீதிமன்றுக்குள் இருந்துவேளையிலேயே இந்தக்கொலை நடந்துள்ளது. இது எவ்வாறு நடந்தது என்பது தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கொலையாளியை எதிர்வரும் 23 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நிதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## பொலிஸார் துப்பாக்கிச் சூடு; இளைஞர் பலி!

இளைஞர் குழுவொன்றுக்கும் பொலிஸாருக்குமடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞரொருவர் பலியானார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கம்பொல பகுதியில் இடம்பெற்றது.

இசைநிகழ்ச்சி ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே பொலிஸாருக்கும் இளைஞர் குழுவுக்கும் இடையே இந்த முறுகல் ஏற்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த இளைஞர்குழுவினர் பொலிஸாருக்குச் சொந்தமான 3 வாகனங்களையும் அடித்து நொருக்கினர். (01)

# ஜப்பானிய அரசசார்பற்ற பிரதிநிதிகள் தமிழ்ச்செல்வனைச் சந்திக்கின்றனர்!

ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட ஜப்பானிய அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவிருக்கின்றனர்.

இந்தச் சந்திப்பு இம்மாதம் 22 ஆம் திகதி கிளிநொச்சியில் இடம்பெறும்.

இந்த பேச்சுவார்த்தையில் அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 20 பிரதிநிதிகள் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச செல்வது தற்போதைய பிரதிபலன்கள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இந்த சந்திப்பின்போது ஆராயப்பட இருப்பதாகத் தெரியவருகிறது.

# களத்தடுப்பில் முன்னேறினாலே அணியின் தரம் உயர்வடையும்!

## பிறைன் லாரா கூறுகின்றார்



மேற்கிந்தியத்தீவுகள் அணியினர் அதியுயர் தகைமையில் டெஸ்ட் போட்டிகளில் முகம் கொடுக்கவேண்டுமாயின் களத்தடுப்பில் அபிவிருத்தியைக் காட்டவேண்டுமென்று, அணித்தலைவர் பிறைன் லாரா கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது.

நாங்கள் பிடிகளை எடுப்பதில் விசேட பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டு வருகிறோம். மேலும் தென்னாபிரிக்கக் காலநிலைக்கு எமது வீரர்கள் நன்கு பழக்கப்பட்டுவிட்டார்கள்.

தரம் குறைந்த பந்து வீச்சு மற்றும் களத்தடுப்பால் - ஐம்பது, அறுபது ஓட்டங்கள் எதிரணிக்குக் கொடுக்கப்படுமேயானால் அது டெஸ்ட் போட்டிகளில் பாரதூரமானதாகவே அமையும்.

அணியில் உள்ள இளம் வீரர்கள் ஆற்றல் நிறைந்தவர்கள். ஆனால், நீண்ட நேரம் களத்தில் நிற்கும் பயிற்சியை அவர்கள் பெறவேண்டும்.

முன்பில்லாதிருந்த ஆட்டத்தின் மீதான தாகம், இளம் வீரர்களுக்கு இப்போது நிரம்பவே ஏற்பட்டிருக்கிறது. கிரிக்கெட் என்பது நிச்சயமற்ற தன்மை நிறைந்ததொரு ஆட்டம்.

இந்தநிலை அணிக்கு ஏற்படும்போது, அதிலிருந்து மீண்டு எழுவதற்கு கடுமையாக



முயற்சிக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தென்னாபிரிக்காவுடனான தொடரில் 2 - 0 என்றவாறு மேற்கிந்திய அணி பின்தங்கி நிற்கிறது. இன்னொரு டெஸ்ட் போட்டி நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மித வேகப்பந்துவீச்சாளர் இந்திய அணியில் சேர்ப்பு!



அவுஸ்ரேலிய, இந்திய, சிம்பாப்வே அணிகளுக்கிடையில் - அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவரும், முக்கோண ஒருநாள் போட்டியில், இந்திய அணியின் பந்துவீச்சை மேலும் வலுப்படுத்துவதற்காக மித வேகப்பந்து வீச்சாளரான அமீப்பண்டாரி இந்திய அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

இவர் அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற இந்திய, இலங்கை, பாகிஸ்தான் ஏ அணிகளுக்கிடையிலான போட்டியில், மிகச் சிறப்பாகப் பந்துவீசி அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு

## மேற்கிந்திய தீவு சுற்றுலாவுக்காக 19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் அணி

மேற்கிந்திய தீவுச் சுற்றுலாவுக்கும், பங்களாதேஷில் நடைபெறவுள்ள 19 வயதிற்குட்பட்டோருக்கான உலகக்கிண்ணப் போட்டியில் கலந்துகொள்வதற்குமான இலங்கை கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

14 பேர் கொண்ட இந்த அணியில் இடம்பெறும் வீரர்களின் விபரம் வருமாறு -

அணித்தலைவர் பார்வேஸ் ம.்.டூர் (வெஸ்லி கல்லூரி), உதவித்தலைவர் பல்கனாத் ரட்ணாயக்க (றோயல்கல்லூரி), உபுல்தரங்க (தர்ம அமசாக்க கல்லூரி), தமிந்து குலரட்ண (ஆனந்தா கல்லூரி), கோசல குலசேகர (வித்தியானந்தாக் கல்லூரி), நதீரா நாடுவல (களுத்துறை மகா வித்தியாலயம்), கௌசல்சில்வா (சென்.தோமஸ் கல்லூரி), ஜிகாண் டீ சில்வா (சென்.பீற்றஸ் கல்லூரி), அஞ்சலோ மத்யூஸ் (சென். ஜோசப் கல்லூரி), அதீரசொய்சா (டி.எல்.சேனநாயக்கா கல்லூரி), மனோத் சானகா (றோயல் கல்லூரி), சுறாய்ச் முகமட் (ராகுல கல்லூரி), கர்ச விதாண, (சென்.அலோசியஸ் கல்லூரி), விதேஷ பாலசுப்பரமணியம் (சென்தோமஸ்கல்லூரி).

இவர்களை விட மேலும் 6 மேலதிக வீரர்களின் பெயரும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. சரித்ஜெயவீர (ஆனந்தாக்கல்லூரி), ரனேஸ்பெரேரா (சென்.ஜோசப் கல்லூரி), டுனில்அபேதீர (சென். செபஸ்ரியன் கல்லூரி), கஞ்சன குணவர்த்தன (டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி), சமீரப் கொய்சா (மல்லிய தேவ கல்லூரி), ரஞ்சன் டயஸ் (சென்.ஜோசப் கல்லூரி) ஆகியோராவர்.

## நெடுந்தீவு கபடிப் போட்டியில் சென்.ஜோன்ஸ் கழகம் வெற்றி

நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவு - 2004 ஆம் ஆண்டுக்கான குழுநிலை விளையாட்டுக் கழகங்களின் இறுதிப்போட்டியாக ஆண்களுக்கான கபடிப்போட்டி நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

முதல் அரையிறுதி ஆட்டத்தின்போது சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம், உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தை 54:43 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றியீட்டி இறுதிப்போட்டிக்கு தெரிவானது. இதேவேளை - இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தின் போது சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழகம் - ஸ்ரார் விளையாட்டுக்கழத்தை 40:24 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டி இறுதிப்போட்டிக்குத் தெரிவானது.

அன்றையதினமே இடம்பெற்ற இறுதியாட்டத்தின்போது சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழகம்-சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தை 31:21 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று 2004 ஆம் ஆண்டுக்கான வெற்றிக்கிண்ணத்தை தட்டிக்கொண்டதுடன், இவ்வருடத்துடன் தொடர்ந்து மூன்று வருடங்களாக ஆண்களுக்கான கபடிப்போட்டியின் வெற்றிபெற்றமையால் செயலக விளையாட்டு விதிப்படி இவ்வருடம் வெற்றிக்கிண்ணத்தை சொந்தமாக தமதாக்கிக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கபடிப் போட்டியின் சிறந்த ஆட்டக்காரராக சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ம.டொனால்ட் றொபின்சன் தெரிவுசெய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (113)

## நெடுந்தீவு பிரதேச செயலக குழுப் போட்டி முடிவுகள்

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்கான 2004 ஆம் ஆண்டுக்குரிய குழுப்போட்டிகள்டி அனைத்தும் நேற்று முன்தினம் முடிவடைந்துள்ளன. சுவட்டு, மைதான நிகழ்வுகள் இம்மாத இறுதி வாரத்தில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை நடந்துமுடிந்த குழுநிலைப் போட்டிகளின் முடிவுகள் ஒரே பார்வையில்


| விளையாட்டின் விபரம் | | 1 ஆம் இடம் | 2 ஆம் இடம் |
|---|---|---|---|
| மென்பந்தாட்டம் | (ஆண்) | உதயசூரியன் | சென்.அன்ரனீஸ் |
| மென்பந்தாட்டம் | (பெண்) | உதயசூரியன் | சென்.ஜோன்ஸ் |
| கரப்பந்தாட்டம் | (ஆண்) | சென்.அன்ரனிஸ் | உதயசூரியன் |
| கரப்பந்தாட்டம் | (பெண்) | உதயசூரியன் | ஸ்ரார் |
| எல்லே | (ஆண்) | உதயசூரியன் | ஸ்ரார் |
| எல்லே | (பெண்) | உதயசூரியன் | ஸ்ரார் |
| உதைபந்தாட்டம் | (ஆண்) | சென்.ஜோன்ஸ் | உதயசூரியன் |
| வலைப்பந்தாட்டம் | (பெண்) | சென்ஜோன்ஸ் | உதயசூரியன் |
| கபடி | (ஆண்) | சென்ஜோன்ஸ் | சென்.அன்ரனீஸ் |
| கபடி | (பெண்) | ஸ்ரார் | சென்.ஜோன்ஸ் |

| விளையாட்டுக் கழகம் | குழுநிலைப் போட்டி புள்ளி | இடம் |
|---|---|---|
| உதயசூரியன் | 71 | 01 |
| சென். ஜோன்ஸ் | 44 | 02 |
| ஸ்ரார் | 31 | 03 |
| சென். அன்ரனீஸ் | 24 | 04 |

(113)

## இரண்டாவது போட்டியிலும் அவுஸ்ரேலிய அணி வென்றது

அவுஸ்ரேலிய, இந்திய, சிம்பாவே அணிகளுக்கிடையில் அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச ஒருநாள் முக்கோண போட்டித்தொடரின் நேற்றைய ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணி 99 ஓட்டங்களால் சிம்



பாவே அணியை வென்றது.

இந்தப் போட்டியின் இரண்டாவது ஆட்டம்-நேற்று சிட்னியில் பகல் இரவுப்போட்டியாக நடந்தது. நேற்றைய போட்டியிலும் அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளரான பிரட்லீ சேர்க்கப்படவில்லை. ஏற்கனவே முதல் போட்டியில் பதினொரு பேர்களிலும் இவரது பெயர் இடம்பெறவில்லை.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணித்தலைவர் தனது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார். தொடக்க வீரர்களாக ஹைடனும் கில்கிறிஸ்டும் களமிறங்கினார்கள்.

சிம்பாவே அணியின் நேர்த்தியான பந்து வீச்சால் அவுஸ்ரேலிய வீரர்கள் ஓட்டங்கள் எடுக்கத் திணறினார்கள். அத்தோடு விக்கெட்டுக்களும் சரிந்தன. 27.1 ஆவது ஓவரில் அந்த அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டங்கள் என்ற பரிதாபநிலையில் இருந்தது.

ஹைடன் 14, பொண்டிங் 21, கில் கிறிஸ்ட் 34, மார்ட்டின் 21, பெவன் 3 ஆகியோர் முறையே ஆட்டமிழந்தனர்.

6 ஆவது விக்கெட்டான சைமண்ட்ஸ், கிளார்க் ஜோடி - அணியை சரிவில் இருந்து மீட்டது. இருவரும் பொறுப்புடன் விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தனர். என்றா லும், அவர்களால் அதிரடியாக விளையாடி ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை.

43.4 ஆவது ஓவரில் இந்த ஜோடி பிரிந் தது. சைமண்ட்ஸ் 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 184 ஆக இருந்தது. அவர் ஆட்டமிழந்த சிறிது நேரத்திலேயே கிளார்க் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இந்த இரண்டு விக்கெட்டுக்களையும் எர்வின் கைப்பற்றினார்.

அதற்குப் பின்னால் வந்த வீரர்களில் ஹார்வி சற்று அதிரடியாக விளையாடினார். அவுஸ்ரேலிய அணியால் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 225 ஓட்டங்களே எடுக்கமுடிந்தது. எர்வின் 3 விக்கெட்டுக்களையும், பிளவர், பிலிங்னட் ஆகியோா தலா இரண்டு விக்கெட்டுக்களையும் எடுத்தனா.

226 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் ஆடத்தொடங்கிய அணியின் தொடக்கமே நன்றாக அமையவில்லை. ஆட்டத்தின் இரண்டாவது ஓவரில் வில்லியம்ஸின் பந்துவீச்சில் மத்யூஹைடனிடம் பிடி கொடுத்து ஒரு ஓட்டத்துடன் கார்லிஸ் ஆட்டமிழந்தார்.

அடுத்து, கிலெஸ்பின் பந்துவீச்சில் வில்லியம்ஸிடம் பிடிகொடுத்து சிபான்டா 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 13. இந்த ஓட்ட எண்ணிக்கையிலேயே வெமியூலனின் 3 வது விக்கெட்டை வில்லியம்ஸ் கைப்பற்றினார். அடுத்து கிரான்பிளவர் ஓட்டமெதுவும் பெறாமலேயே வில்லியம்ஸின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 14. அணியின் ஓட்ட எண்ணிக்கை 17 ஆக இருக்கும்பொழுது மற்ஸ்கென்யறி வில்லியம்ஸின் பந்துவீச்சில் விக்கெட் கீப்பர் கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

அடுத்த விக்கெட் ஜோடியாக அணித்தலைவர் கீத்ஸ்ரிக்கும் உபதலைவர் ரைபூவும் அணியை இக்கட்டிலிருந்து மீட்டு, 5ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக சிறப்பாக ஆடிக்கொண்டிருக்கையில் 29 ஓட்டங்களைப் பெற்றிருந்த ரைபூ சைமன்ஸின் பந்துவீச்சில் கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அப்போது அணியின் ஓட்டஎண்ணிக்கை 90. இவர்கள் இருவரும் 5வது விக்கெட் இணைப்பாட்டமாக 73ஓட்டங்களைப்பெற்றனர். அணியின் ஓட்டஎண்ணிக்கை 119 ஆக இருக்கும் பொழுது 46 ஓட்டங்களைப் பெற்றிருந்த கீத்ஸ்ரிக் கிளார்க்கின் பந்துவீச்சில் கில்கிறிஸ்டினால் 'ஸ்ரம்ப்' செய்யப்பட்டு ஆட்டமிழந்தார். அடுத்த மூன்று விக்கெட்டுக்களும் 5 ஓட்டங்களுக்குள் வீழ்த்தப்பட்டது. இறுதியில் சிம்பாப்வே அணி 37.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 126 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

அவுஸ்ரேலிய அணியின் பந்துவீச்சாளர்களில் பிரட்வில்லியம்ஸ் 5 விக்கெட்டுக்களையும், கிலெஸ்பி சைமன்ஸ் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கிளார்க் ஒருவிக்கெட்டையும் வீழ்த்தினர்.

நடந்து முடிந்த இரண்டு போட்டிகளிலும் அவுஸ்ரேலிய அணி வென்று முதலாம் இடத்திலும், இந்தியா இரண்டாம் இடத்திலும் சிம்



பாவே மூன்றாவது இடத்திலும் உள்ளது. நான்காவது போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி இந்திய - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் பகல் போட்டியாக இடம்பெறவுள்ளது.

# மிதிவெடி அகற்றும் பணிக்கு இந்த ஆண்டு மேலும் ஒரு தொகுதியினர் இணைக்கப்படுவர்

## யாழ். செயலக அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு யாழ்.மாவட்ட மிதிவெடி அகற்றும் செயற்பாட்டில் ஈடுபடுவதற்காக, மேலும் ஒரு தொகுதி ஆளணி திரட்டப்படவுள்ளது என, யாழ்.செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் செயற்பாட்டு அதிகாரி எல்மோ ஆனந்தராசா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

பிரதமர் அலுவலகத்தின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் வடக்கு, கிழக்கில் மிதிவெடி, கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

தற்போது சேவையிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையைக்கொண்டு, கடந்த வருடம் திட்டமிடப்பட்டதுபோல் 2006 ஆம் ஆண்டுடன் இப்பணிகளைப் பூரணப்படுத்தமுடியாதுபோய்விடும் எனக் கருதியே இவ்வாறு மேலதிக ஆட்சேர்ப்பை மேற்கொள்ள பிரதமர் அலுவலகம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த அட்சேர்ப்பிற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படவுள்ளன. இதன்படி - யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் வேலைவாய்ப்பினைப் பெறக்கூடியதாக இருக்கும்.

யாழ்.மாவட்டத்தில் வெடிபொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் இராணுவ வெடிபொருள் அகற்றும் பிரிவு, ஹலோட்ரஸ்ட் வெடிபொருள் அகற்றும் பிரிவு, டெனிஸ் வெடிபொருள் அகற்றும் பிரிவு என்பனவற்றுக்கே இந்த ஆட்பலம் அதிகரிக்கப்படவுள்ளது.

உலக நாடுகளில் வெடிபொருட்களை அகற்றுவதற்கு எந்தவகையான நவீனகருவிகள் பயன்படுத்தப்படுகின்றனவோ, அத்தகைய பொருட்கள் யாவும் இங்கும் பயன்படுத்தப்பட்டும். மேலும் பல பகுதிகளில் மிதிவெடிகள் அகற்றப்படாமல் இருப்பது கவலைக்குரியது என அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# வெற்றிலைக்கேணி றோ.க.த.க. பாடசாலை இன்றுமுதல் சொந்த இடத்தில் இயங்கும்!

(ஆழியவளை)

தற்காலிகமாக மூடப்பட்டிருந்த வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

1991 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த இந்தப் பாடசாலை - 2000 ஆம் ஆண்டுவரை செம்பியன்பற்றுப் பகுதியில் தற்காலிகமாக இயங்கி வந்தது. அதன் பின்னர், ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்ததை அடுத்து, பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து மக்கள் முற்றாக இந்தப் பிரதேசத்தில் மீளக்குடியேறியதைத் அடுத்து, இந்தப் பிரதேசத்தின் 11 ஆவது பாடசாலையாகத் திறக்கப்படவுள்ளது.

இந்தப் பாடசாலையை வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் ஆரம்பித்து வைக்கவுள்ளார். வடமராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் கி.தாயகன், மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி பா.ரகுநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தப் பாடசாலையின் அதிபராக பொ.பொன்னம்பலம் கடமை ஏற்கவுள்ளார். (122)

# நெடுந்தீவு பிரதேசத்தின் புனர்வாழ்வுத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நாளை நடைபெறும்!

(நெடுந்தீவு)

புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீளக்குடியமர்த்துகை அமைச்சு நிதியின்கீழ் - 2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் - நாளை செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு நெடுந்தீவு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்குப் பிரதேச சபை செயலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், கிராம அலுவலர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் தீவிலுள்ள 12 கிராமிய புனர்வாழ்வு, புனரமைப்புக்குழுத் தலைவர்கள், செயலாளர்கள் போன்றோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இது தொடர்பான அறிவித்தல்கள் ஏற்கனவே உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு, நெடுந்தீவு பிரதேச செயலாளர் ச.பேரானந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (113)

# கடற்தொழிலாளர் சங்கங்களின் சம்மேளனம் அங்குரார்ப்பணம்!

யாழ்.மாவட்ட கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்கள் ஒன்றிணைந்து, யாழ்.மாவட்ட கூட்டுறவு சமாசங்களின் சம்மேளனம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துள்ளன. கடற்தொழிலாளர் சமூகத்தை மேம்படுத்தும் நோக்கில் 10 சமாசங்கள் ஒன்றிணைந்து இந்த சம்மேளனத்தைக் கடந்தமாதம் ஆரம்பித்துள்ளனர்.

கடற்தொழில் மக்களின் வாழ்க்கைத்தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில், சமாசங்களில் செயற்பாடுகளை வலுவடையச் செய்வதன் மூலம் - சங்கங்களினூடாகத் தொழிலாளர்களுக்குத் தேவையான உதவிகளை உரியமுறையில் வழங்கும் நோக்கிலேயே இந்தச் சம்மேளனம் உருவாக்கப்பட்டுள்ளது.

மி.அன்ரனி வின்சன்லோஸ் தலைவராகவும், க.சூரியகுமாரன் செயலாளராகவும், வ.பயஸ் லோகதாஸ் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டு - இந்தச் சம்மேளனம் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைக்குச் சொந்தமான கடற்கரை வீதியிலுள்ள கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது. யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து கடற்தொழிலாளர்களது தேவைகளை உரியமுறையில் சமாசங்கள், சங்கங்கள் ஊடாக வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்டு, செயற்பட்டுவரும் சம்மேளனம் - மிக விரைவில் யாழ்.நகரில் நிரந்தர கட்டடத்தில் இயங்கவுள்ளதாகவும் சம்மேளன செயலாளர் தெரிவித்தா.(91)

# பளை பொது நூலக வடிகால் புனரமைக்கப்படாமையால் சிரமம்

(பளை)

பளை பொதுநூலக வடிகால்மீது கொங்கிறீட் இடப்படாத காரணத்தால் வாசகர்களும், மாணவர்களும் தமது துவிச்சக்கர வண்டிகளை - கண்டி வீதியில் நிறுத்திவிட்டுச் செல்லவேண்டியுள்ளது.

ஏ-9 வீதி புனரமைப்பின்போது - பளை நகர வீதியின் இரு மருங்கிலும் வடிகால் வெட்டப்பட்டது. இந்தக் குழிகள் சிமெந்தினால் கட்டப்படவில்லை. சில இடங்களில் குழாய் இடப்பட்டுள்ளது. ஆனால், பெருமளவு மக்கள் பயன்படுத்தும் நூலகத்தின் முன்னால், குழாய் இடப்படாதது குறித்து வாசகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (115)

# அல்லிப்பளை தமிழ்க்கலவன் பாடசாலை 7 வருடங்களின் பின் சொந்த இடத்தில்

## கிளிநொச்சி அரச அதிபர் திறந்துவைத்தார்

(பளை)

அல்லிப்பளை சி.சி.த.க.பாடசாலை கடந்த புதன்கிழமையன்று 7 வருட இடைவெளியின் பின்னர் திறந்துவைக்கப்பட்டது. இந்தப் பாடசாலையை கிளிநொச்சி அரச அதிபர் இராச நாயகம் திறந்துவைத்தார்.

இந்தத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய அரச அதிபர் - கிளிநொச்சி மாவட்டத்தில் 80 பாடசாலைகள் இடம்பெயர்ந்து இயங்குகின்றன. இவற்றை சொந்த இடத்தில் இயங்கவைப்பதற்கு முயற்சி எடுத்துவருகின்றோம்.

அதன் ஒரு பகுதியே இந்தப் பாடசாலைக்கு நாம் நிதியுதவி வழங்கியமையாகும். கிணறு அமைக்க வந்த நிதியைப் பாடசாலை அமைக்க வழங்கினோம். இதனால், ஒரு முக்கிய மனித அவலம் நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிராமியப் பாடசாலைகளில் கல்வி வளர்ச்சியால், நகரப் பாடசாலைகள் மீதான கவர்ச்சியும், அழுத்தமும் குறைவடையும். கிராமியக் கல்வியே சிறப்பானதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் அமைகின்றது. கிராமிய மட்டத்தில் கல்வி பயில்பவர்கள் மரியாதை தரக்கூடியவர்களாக இருக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டக் கல்வி வளர்ச்சிக்கு நாம் பாரிய உதவிகளைப் பல்வேறு நிறுவனங்கள் மூலம் பெற்றுக்கொடுக்கின்றோம். இந்த மாவட்டத்திற்கு 86 மில்லியன் ரூபா செலவில் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆனால், வேகம் போதாமையாகவுள்ளது. இங்கு ஒப்பந்தகாரர் வரத் தயங்குகின்றனர். இதற்குக் காரணம் அவர்களுக்கு இலாபம் போதாமல் உள்ளமையே.

எனவே, மக்கள் தங்கள் பங்களிப்பை வழங்கி, அபிவிருத்தியை துரிதப்படுத்தவேண்டும். மேலும், நாம் எமது மாவட்டத்தில் கல்வியை விருத்தி அடையச் செய்வதன்மூலம், தனியார் கல்வி நிறுவனக் கல்வியை இல்லாதுசெய்யவேண்டும். அதற்கு கிராமங்களில் கல்வி வளர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

உங்களுக்கு என்னவேண்டும் என்றாலும், அதனை நேரடியாகக் கேளுங்கள். எழுச்சியுள்ள சமுதாயமே தனது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளமுடியும்.

நாம் ஒதுக்கிய 89 ஆயிரம் ரூபா பணத்தில் இந்தக் கட்டடத்தை மிகவும் அழகாகவும், உறுதியாகவும் புனரமைப்புச் செய்துள்ளீர்கள். இதேயளவு நிதியில் பூநகரியில் புனரமைப்புச் செய்யப்பட்ட கட்டடங்கள் இரண்டு காற்றினால் விழுந்துவிட்டன. ஆனால், உங்கள் கட்டடம் ஒரு வேயத்தக்க தன்மையில் உள்ளது. மிகவிரைவில் இந்தக் கட்டடத்துக்கு என்னால் ஆன உதவிகளைச் செய்வேன் என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் - பளைப்பகுதி அரசியற்துறைப் பொறுப்பாளர் வின்சன், பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர் வைரமுத்து, பளை கோட்டக் கல்வி அதிகாரி அ.கைலாயபிள்ளை, பிரதேச செயலாளர் சு.புத்திரசிகாமணி ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர். (115)

# கொடிகாமம் பிரதேச செயலர் பிரிவில் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

(தென்மராட்சி)

கொடிகாமம் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. கொடிகாமம் பிரதேச சபை, சாவகச்சேரி நகரசபை என்பன சுகாதார திணைக்களத்துடன் இணைந்து, கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டிக் கொல்லப்படவுள்ளன.

இன்று கொடிகாமம் நகரப்பகுதியிலும், நாளை கச்சாய் கிராமத்திலும், நாளைமறுதினம் உசன் கிராமத்திலும் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் - இந்தப் பிரதேசத்தில் உள்ளோர் தமது வளர்ப்பு நாய்களைக் கட்டிவைத்து ஒத்துழைக்குமாறு, கொடிகாமம் பொது சுகாதாரப் பரிசோதகர் என்.நிர்மலானந்தன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பஸ்தரிப்பு நிலையம் இன்மையால் மக்கள் அவதி

(பளை)

பளை நகரப்பகுதியில் பஸ்தரிப்பு நிலையம் இன்மையால், மக்கள் பெரிதும் அசௌகரியம் அடைகின்றனர். குறிப்பிட்ட இடத்தில் என்றில்லாமல், மக்கள் தாம் நினைத்த இடத்தில் நின்று பஸ் வண்டிகளை வழிமறிப்பதைக் காணமுடிகின்றது. இதனால், சாரதிகளும் சிரமம் அடைகின்றனர்.

பளை நகரப்பகுதியில் பஸ்தரிப்பிடம் ஒன்று இருந்தால், இத்தகைய பிரச்சினை எதுவும் ஏற்படாதென மக்கள் தெரிவிக்கின்றனர். இதற்குப் பளைப் பிரதேச அதிகாரிகள் ஆவன செய்யவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. (115)

# சின்னஞ்சிறு செய்திகள்

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அடிப்படை வசதிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் நீண்டகாலமாக குறைபாடு நிலவிவந்த சில அடிப்படை வசதிகள், தற்போது ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக, வைத்தியசாலை வைத்திய அதிகாரி சி.அம்பிகைபாகன் தெரிவித்தார்.

யுனிசெவ் நிறுவனத்தினர் இரண்டு மலசலகூடங்களை அமைத்துக் கொடுப்பதற்கான நிதியினை வழங்கியுள்ளனர். இதற்கான வேலைத்திட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

இங்குள்ள நீர்ப்பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் முகமாக - வெளிநாட்டில் வசிக்கும் தனிநபர் ஒருவரால் குழாய்க் கிணறும், தண்ணீர்த் தாங்கி ஒன்றும் பொருத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. (25)

## ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான பாடத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் - வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நாளைமறுதினம் முதல் மூன்று அமர்வுகளாக இடம்பெறவுள்ளன.

தரம் 1, தரம் 2 ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 13 ஆம் திகதியும்- தரம் 3, தரம் 4, ஆசிரியர்களுக்கு 14 ஆம் திகதியும் - தரம் 5 ஆசிரியர்களுக்கு 19 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளது என வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா தெரிவித்தார்.

காலை 8.30முதல் 3 மணிவரை இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலுக்கு வரும் ஆசிரியர்கள் பாடத்திட்டக் கொப்பி, ஆசிரியர் கைநூல் என்பவற்றைக் கொண்டு வருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மகப்பேற்று விடுதி கட்டடப் பணிகள் பூர்த்தியடையும்நிலை

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை மகப்பேற்று விடுதி கட்டட வேலைகளில், 75 வீதமானவை முடிவடைந்துள்ளன. எதிர்வரும் ஏப்ரல் மாதம் விடுதியைத் திறந்துவைத்து, பணிகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்குமென, வைத்தியசாலை அதிகாரி சி.அம்பிகைபாகன் தெரிவித்தார்.

இந்த வைத்தியசாலையில் நீண்டகாலமாகப் பணியாற்றி இடமாற்றம் பெற்ற உதவி வைத்தியர்கள், ஏனைய ஊழியர்களின் இடமாற்றங்களும் நிறுத்தப்பட்டிருப்பதாக வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (25)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

கடந்த சில மாதங்கள் நெல்லியடிப் பிரதேசத்தில் - டெங்கைப் பரப்பும் நுளம்புக் குடம்பிகள் பெருமளவு அதிகரித்து காணப்பட்டதையடுத்து - அந்தப் பகுதி சுகாதாரப் பிரிவும், நெல்லியடி பிரதேசசபையும் இணைந்து கட்டுப்பாட்டு நடவடிக்கை மேற்கொண்டதையடுத்து, தற்போது திருப்திகரமானநிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## தொழில்நுட்பக் கல்லூரி பளையில் திறப்பு

(பளை)

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி நிறுவனத்தின் ஒரு பகுதி பளைப் பகுதியில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

பளை பிரதேச செயலக வளவில் திறந்துவைக்கப்பட்டுள்ள இந்த தொழில்நுட்பக் கல்லூரியில் மேசன், தச்சுவேலைகளுக்காக மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக ஒரு பகுதி மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றனர். (115)





## சிறுகதை

# மாறாத துயரங்கள்

## சின்னையா செல்வகுமார்.

நான்கு நாட்களாக தொடர்ந்து பெய்துகொண்டிருந்த கடும் மழை, சற்று ஓய்துபோயிருந்தாலும் மழைத்தூறல்கள் இன்னும் முற்று முழுதாய் நின்று போகவில்லை. எங்கும் இருள் கவிந்தவானத்தில், மின்னல் கீற்றுக்கள் பளீர், பளீரென விளாசிக் கொண்டிருந்தன. பூமியே அதிரும் படியாக ஆகாயத்தில் இடிமுழக்கங் கள் வேறு காதைப் பிளந்தபடி...

ஆங்காங்கே நின்ற பெரு மரங்களெல்லாம், வேரோடு புரண்டு, வீதியின் குறுக்கும் நெடுக குமாக வீழ்ந்துகிடந்தன. மனிதர் கள் எவரையும் வெளியில் காண வில்லை.

முற்றிலும் மயான அமைதி நிலவிக்கொண்டிருந்த அந்தக் கிராமத்தில், ஓரிரு வீடுகளைத் தவிர, மண்குடிசைகளெல்லாம் மழை வெள்ளத்தில் மூழ்கிக்கிடந்தன.

சில்சில்லென்ற குளிர்காற்று எங்கும் சூறாவளியாய் சுழன்றடிக்க, அந்தக்கல் ஒழுங்கையை ஊடறத்து வெள்ளம் பேரிரைச்சலுடன் பாய்ந்துகொண்டிருந்தது.

அந்த ஒழுங்கையின் இடது புறமாகவுள்ள ஓர் பனையோலைக் குடிசைக்குள்தான், ஒழுக்கில்லாத மூலையில் ஓரம்பார்த்து சாரதாவும், அவளடைய மூன்று குழந்தைகளும் படுத்திருந்தனர்.

கடைக்குட்டி - குளிரைத் தாங்கமுடியாமல், தாயின் சேலைத்தலைப்பை இழுத்து, தனது போர்வையாக்கிப் படுத்துக்கொள்ள, மற்றைய இரண்டு குழந்தைகளும் மண் சுவரோடு ஒட்டியபடி படுத்திருந்தனர்.

மழை ஒழுக்கில் கரைந்துபோன ஒரு பக்கச்சுவருக்குப் பச்சைத்தென்னோலையால் மறைப்புப் போட்டிருந்தாலும், வீசும் காற்றில் தூவானம் - அவர்களைத் தட்டியெழுப்பிக் கொண்டுதான் இருந்தது.

நள்ளிரவு தாண்டியும் சாரதாவுக்குத் தூக்கம் வரவில்லை. மகளது முதுகை வருடியபடி, ஒருக்களித்துப் படுத்திருந்தாள்.

அவளது கண்கள் அந்த ஓலைக்குடிசையின் இன்னொரு மூலையில், குளிர்காற்றையும்மீறி மின்னிக்கொண்டிருந்த 'குப்பி' விளக்கையே வெறித்துக்கொண்டிருந்தன. சுழன்று வீசிய காற்றில் அணைந்துவிடும்போல், அசைந்துகொண்டிருந்தது தீச்சுடர். அந்தச் சுடரைப்போலதான், அவளது மனம் இரும்பாய் கனத்தது.

அவளது நிழலில் வாழவேண்டிய அன்புச்செல்வங்களுமல்லவா. அலைகடலில் துரும்பாய் பசிக்கொடுமையில் அல்லற்படுகின்றனர்.

ஏனிந்த நிலைமை? இத்தனை துன்பங்கைளையும் சுமக்கவா இவர்களை நான் பெற்றெடுத்தேன்? கடவுளே நாங்கள் என்ன பாவம் செய்தோம்? ஏன் எங்களை இப்படிச் சோதிக்கிறாய்?

அவளது கன்னங்களில் கண்ணீர்த்துளிகள் பாரமாய் விழுந்துகொண்டிருந்தன. ஆனாலும், எதிர்காலத்தைப் பற்றி அடிமனதில் சிறு நம்பிக்கை.

தூரத்தில் எங்கேயோ ஓர் சேவல் கூவியது. பொழுது புலர்ந்துவிட்டதை எண்ணித் திடுக்கிட்டாள்!

இரவு முழுவதும் தூங்காத கண்கள் - பலமாய் எரியத் தொடங்கின. கடவுளே! இரவை இன்னும் கொஞ்சநேரம் நீடிக்கமாட்டாயா? விடிந்துவிட்டால் பிள்ளைகள் பசியால் துடிப்பார்களே? மனதிற்குள் மன்றாடினாள். இரவுதானே ஏழைகளின் பசிபோக்கும் தேவன்.

பொழுது நன்றாகப் புலர்ந்துவிட்டது. சூரியனைக் காணாமல் பூமி சேறாகியிருந்தது. மழை சற்று தணிந்துவிட்டாலும், வலுக்கும்நிலைதான்.

பசி வயிற்றைக் கிள்ளியது. சாரதா வீட்டின் எல்லா மூலைகளிற்குள்ளும் தேடிக் களைத்து விட்டாள். கஞ்சி காய்ச்சுவதற்குக் கூட ஒருபிடி அரிசி இல்லை. மனதில் வெறுமை மட்டுமே எஞ்சியிருந்தது.

எதுவுமே புரியாமல் சிறிது நேரம் மண்சுவரோடு சாய்ந்து நின்றாள்.

'விதுஷா...!'

'விதுஷா...!'

சற்றுத் தயவு கலந்த குரலிலேயே தன் இளையமகளைக் கூப்பிட்டாள்.

தாயின் குரலைக்கேட்டு, அருகே வந்த விதுஷா - 'என்ன...?' என்று தலையைச் சொறிந்தபடியே, அவளது முகத்தைக் கூர்ந்தாள்.

'விதுஷா...! பக்கத்து வீட்டு யமுனா அக்கா விட்டில போய், பிறகு தாறனெண்டு சொல்லி, ஒரு சுண்டு அரிசி வாங்கிட்டு வாம்மா...'

'.......!'

தாய் சொல்லைத் தட்டாத விதுஷா, இப்போது வேரூன்றிய மரம்போல அசையாமல் நின்றாள். அவளது அழகிய முகத்தில் பிடிவாதம் மெலிதாய் இளையோடியிருந்தது.

'என்னம்மா விதுஷா...! கெதியாபோய் வாங்கிட்டு வாம்மா...!'

மீண்டும் கெஞ்சினாள் தாய்

கலாசரம்

விதுஷா... காது கேளாதவள்போல் தலையைக் கீழே தொங்கப்போட்டபடி நின்றுகொண்டாள். அவளது நிலையே அவளுக்குப் போகவிருப்பமில்லை என்று காட்டியது.

அவளது மனதில் நேற்று, அதற்கு முதல்நாள் நடந்த சம்பவங்கள் இன்னமும் ஞாபத்தில் இருந்தன.

பக்கத்து வீடுகளிலெல்லாம் சாரதா அரிசியும், மாவும் வாங்கி கடன்பட்டிருந்தாள். அவள் தான் கடனுக்கும் செல்வாள். அங்கு அவள் கடன்வாங்காத வீடே இல்லை.

முதல் நாளும் இப்படித்தான் மாலதிச் சித்தி வீட்டுக்கு அரிசி வாங்கப் போயிருந்தாள் விதுஷா. அவளைக கண்டதும் - மாலதியின் முகம் சிவந்து, எள்ளும் கொள்ளுமாய் வெடிக்கத் தொடங்கியது. அவள் கதவைத் திறந்ததுதான் தாமதம், வீரபத்திரர் கோலம்கொண்டு, ருத்திர தாண்டவமாடினாள்.

'ஏன்டி விதுஷா... உங்களுக்கு இதுதான் தொழிலாப் போச்சுதா? ஏற்கனவே வந்துவாங்கின அரிசி, மா எதுவும் வந்துசேரல. அதற்குள்ள திரும்பவும் கடனா? இப்படியே ஒவ்வொருநாளும் தந்துகொண்டிருந்தால், உங் களைப்போலத்தான் நாங்களும் ஓட்டாண்டியா திரிய வேண்டிவரும்.

இங்க அரிசியுமில்லை, மாவுமில்லை. முதல்ல உங்கம்மா இங்க வந்து வாங்கின கடன்களைக் கொண்டுவந்து தரச்சொல்லு'.


காரசாரமாகப் பதில் கூறியவள், கதவைப் 'படார்' என்று சாத்திவிட்டு உள்ளே சென்றாள்.

விதுஷா சிலையாகி நின்றாள். அவளைச் சுற்றிலும் அயல் சனங்கள் கூடிவிட்டனர். பத்து வயதானாலும், அனைத்தும் புரிந்த வயதுதானே. அவமானத்தில் கூனிக்குறுகிப்போய் நின்றாள். அழுகை பொங்கியது. அடக்கிக்கொண்டாள்.

ஒவ்வொருவரும் விதுஷாவைப் பற்றியும், அவளது தாயைப் பற்றியும் வாய்க்கு வந்தபடி பேசிக்கொண்டு சென்றனர்.

எந்தவித பிரக்ஞையுமற்று, தூக்கத்தில் நடப்பவளைப் போல், நடந்துசென்றாள் விதுஷா.

அந்தச் சிறுமியின் பிஞ்சு மனதில் ஆறாத ரணமாய் படிந்திருந்தது அந்தச் சம்பவம். தன்வேதனையைத் தாய்க்கு வெளிப்படுத்தாமல், மனதிற்குள் பூட்டி வைத்திருந்தாள். இத்தனையும் மழை விட்டு சிறிது நேரத்தில் நடந்து முடிந்தது.



சாரதா எவ்வளவுதான் கேட் டும் விதுஷா எதுவும் கூறவில்லை.

'அம்மா... அவங்களிட்டை அரிசிஇல்லையாம்' கூறிவிட்டுச் சென்று விட்டாள்.

ஆனாலும் விது ஷாவின் வேதனை படிந்த முகம்தாயின் கண்களுக்கு எதையோ புரியவைத்தது. இன றும் அதேகோலததில் நிற் கும் மகளைப் பார்த்ததும், நடக்கக் கூடாத ஏதோஒரு சம்பவத்தால் அவள் மனமுடைந்திருப்பது தெரிந்தது.

மகளை மீண்டும் துன்புறுத்த விரும்பாதவள் நீண்ட பெரும் மூச்சொன்றை விட்டவாறு, பிரிந்துபோய்க் கிடந்த வீட்டுக் கூரையினூடாக வானத்தை அண்ணாந்து பார்க்கிறாள். மழை பேரிரைச்சலுடன் வருமாப் போலிருந்தது. மழைபொழிந்து, மண் இளகியென்ன, சில மனித மனங்கள் இன்னும் இளகவில்லையே!

மனதிற்குள் பொங்கியெழுந்த கவலை உப்புக்கண்ணீராய் கன்னத்தில் வழிந்தோடியது. வாழ்க்கையை வெறுத்தென்ன? வெறுப்புத்தானே எனக்கு வாழ்க்கையாகிவிட்டது! முழங்காலுக்குள் முகம்புதைத்து அழத்தொடங்கினாள்.

கணவனை என்றைக்கு இனவெறிப்படைகளுக்கு இரை கொடுத்தாளோ, அன்றிலிருந்து அவளது வாழ்க்கை இப்படித்தான் நகர்கிறது. அது ஒரு சோகச் சம்பவம்.

1997 ஆம் ஆண்டு வன்னியில் இடம்பெயர்ந்திருந்தவேளையில், அன்றும் இப்படித்தான் ஒரு மாரிகால மழைப்பொழுது வழமைபோலவே தனது பழைய சைக்கிளையும், கோடரியையும் எடுத்துக்கொண்டு விறகு வெட்டுவதற்காக காட்டுப்பக்கம் போனான் அவளது கணவன் சுரேஷ்.

பச்சைப்பசேலென்ற புல்வெளிகளும், பாய்ந்தோடும் சிற்றாறுகளும், இயற்கை தடவிவரும் இதமான காற்றும், சிட்டுக்குருவிகளும், சிணுங்கல் நிறைந்ததுமான 'ஜெயந்திநகர்' பிரதேசம் அது.

இயற்கையை ரசித்தவாறே வயல் வரம்புகளினூடாகச் சென்றுகொண்டிருந்தான் சுரேஷ்.

இடையில் ஓரிடத்தில் சில கள்ளிச் செடிகள் நகர்ந்து வரு வதுபோலிருக்கவே ஆச்சரியப்பட்டவன், சையிக்கிளிலிருந்து இறங்கி அருகில் சென்றான். அதற்கிடையில்...

"அடோவ்... கொட்டி எங்க போறது...?"

பற்றைக்குளிலிருந்து கரிய நிறத்தில் ஒருவன் வெளிப்பட்டான். உடம்பெல்லாம் கள்ளிச்செடிகளால் மூடிக்கட்டி கையில் துப்பாக்கியுடன்...

சுரேஷிற்கு எல்லாமே புரிந்துவிட்டது. ஆனாலும், எங்கும் ஓடமுடியாதநிலை. அவனோ சுரேஷை நெருங்கி வந்துகொண்டிருந்தான். சுரேஷிற்கு எதுவுமே புரியவில்லை பயத்தால், உடம்பெல்லாம் வியர்ந்து நடுநடுங்கவே, இரண்டு கைகளையும் மேலே உயர்த்தியவன்-

'அ... அ... ஆய்யா என்னை ஒன்றும் செ... செய்திடாதீங்க நா... நான்... ஒரு ஏ... ழை...'

நா தளுதளுத்தபடியே அவன் கூற, அவன் அருகில் வந்தவன் தனது சப்பாத்துக்காலால் அவனது நெஞ்சை 'படார்' என உதைத்தான். சுரேஷ் பின்புறமாக சற்றே சரிந்துவிழவே, மேலும் சில சப்பாத்துக்கால்கள் அவன் உடம்பைப் பதம்பார்த்தன.

மூச்சு சற்று அடங்கிப்போகவே அவனது தலையைப் பிடித்து இழுத்த ஒருவன், அவனது இரண்டு கைகளையும் கயிற்றினால் கட்டி தரதரவென இழுத்துச் சென்றான். அவ்வளவுதான். நான்கு நாட்களாக அவனைக் காணாமல் வீட்டுக்காரரும், ஊராரும் தேடியது- கண்டதுண்டமாக வெட்டப்பட்ட அவனது உடலை. ஒரு பாழடைந்த கிணற்றுக்குள் காண முடிந்தது.

சேதியைக் கேட்டதும், அவனது தந்தையார் அந்த இடத்திலேயே உயிர் துறந்தார். சாரதாவோ தனிமரமாக நின்று கத்திக்கதறினாள். அன்று அவளது கண்களில் ஊற்றெடுத்த கண்ணீர் தொடர்ந்தும் வழிந்துகொண்டுதான் இருந்தது.

காலங்கள் சில கடந்தன. நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டு சமாதானம், சகவாழ்வு ஆரம்பித்ததற்கு கடந்த மாதம் தான் சாரதா யாழ்ப்பாணத் திற்கு வந்திருந்தாள்! ஆனால், அவளுக்கு இங்கும் ஏமாற்றமே மிகுதியாய் கிடைத்தது. அவளுக்கென்று இருந்த ஒரேயொரு கல்வீடும் ' பாதுகாப்பு வலயம்' என்ற பெயரில் முடக்கப்பட்டிருந்தது.


சில நாட்களாக தங்க இடமேதுமின்றி, வீதிவழியே குழந்தைகளுடன் அலைந்து திரிந்தவளுக்கு, இந்த ஒரு பாழடைந்த ஒரு கொட்டில் வீடு கண்ணில்படவே அதுவே போதுமென்று பிள்ளைகளுடன் தங்கிக்கொண்டாள்.

பலத்த இடி முழக்கத்துடன் மழை இரைந்துகொண்டுவரவே, சிந்தனை கலைந்து திடுக்கிட்டு எழுந்த சாரதா, உள்ளே போய் பார்த்தாள்- மூன்று குழந்தைகளும், சோர்ந்து மௌனமாய் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தனர். அந்தக் காட்சியைக் கண்டதும் சாரதாவுக்கு நெஞ்செல்லாம் பற்றியெரிவதுபோலிருந்தது. மனதிற்குள்ளேயே அழுதபடி கண்களைத் துடைத்தபடி, மழைத்தூறல்களின் ஊடே வெளியே எட்டிப்பார்க்கிறாள். தூரத்தில் ஓர் பெரிய பனம பாத்தி அந்த வேலியோரமாகப் போடப்பட்டிருந்தது தெரிந்தது.

இப்போது அவளது மனதில் ஓர் ஆத்ம திருப்தி. எல்லாவித கவலைகளிலிருந்தும், விடுபட்ட ஓர் உணர்ச்சி- அந்த பனம்பாத்தியைக் கண்டதும் அவளது முகத்தில் தெரிந்தது. பிள்ளைகளின் பசிக்கு இப்போது இதைப்பிடுங்கி அவித்துக் கொடுப்போம் என எண்ணியவள், கொட்டும் மழையிலும் நனைந்தபடி ஓடிச்சென்று வெளிப்புறமாக இருந்த ஓர் பனங்கிழங்கை ஆவலுடன் கையால் பிடுங்கி இழுததாள்- அவ்வளவுதான்- இருண்டிருந்த வானம் ஒருமுறை கும்... கும்... எனும் இரண்டு பெரும் ஓசைகளுடன் தீப்பிளம்பாய் ஒளிர்ந்தது. காலதேவனின் கரங்களால் அவளுக்காக புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியில் அவள் உடல் சிதறி, மழை நீரெங்கும் செந்நிறமாய் ஓட, அந்த ஓலைக்குடி சைக்குள் பசியால் அழுதுகொண்டிருந்த சின்னஞ்சிறுசுகள் ஓல மிட்டவாறே வெளியே ஓடிவருகின்றனர். தாயையும் கூடவே மனி தத்தையும் தேடியபடி...!

# கிழக்கும் மேற்கும்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் வீரமாமுனிவரும்



கிழக்கினில் உதித்துக் கற்றுச்
சிவநெறி தமிழைக் காத்துச்
சுழன்றிடும் உலகம் போற்ற
அரும்பணி செய்தார் ஒருவர்!
மேற்கினிற் பிறந்து கற்றுத்
தமிழினில் மிகுந்த பற்றால்
போற்றிடும் கிழக்கே வந்து
தமிழ்ப்பணி செய்தார் ஒருவர்!

தொல் பொருள் நகராம் நல்லூர்ப்
பதியினி லவத-ரித்தார்!
சொல்லரும் இனிமை மிக்க
தமிழினைக் கற்றுத் தேர்ந்தார்!
தள்ளரும் ஆங்கிலத்தைக்
தெளிவுறக் கற்றுக் கொண்டார்!
கொள்ளரும் வளங்கள் மிக்க
வடமொழி யதையும் கற்றார்!
விள்ளரும் கல்வி கற்க
இலவச பள்ளிக் கூடம்
பிள்ளைகட் கமைத்து ஆங்கே
தாமமர்ந் தறிவைத் தந்தார்!
கற்றவ ரன்றி மற்றோர்
அறிந்திட வியலா வண்ணம்
நற்றமிழ்ப் பாக்கள் கொண்டு
விளங்கிய புராண நூல்கள்
பலவற்றை எளிமை மிக்க
வனசத்திற் பெயர்த் தெடுத்துப்
படிப்பறி வில்லார் கூடப்
படிப்பதாற் பயன்கள் கொள்ளத்
தமிழினம் போற்றும் வண்ணம்
அச்சினிற் பதித்துத் தந்தார்!
தமிழரிற் சைவத் துண்மை
அறிந்திடாக் காரணத்தாற்
சைவத்தை விடுக் கிறீஸ்து
சமயத்தை நாடும் போழ்து
சைவத்தின் மேன்மை கூறி
அவர்களைத் தடுத்துக் கொண்டார்!
பார்சிவல் சுவாமி வேண்டப்
பைபிளைத் தமிழி லாக்கிப்
பாரதம் எடுத்துச் சென்று
அறிஞரால் ஏற்கச் செய்தார்!
ஆலயங் களிலே சைவப்
பிரசங்கம் செய்து வந்தார்!

(தொடரும்...)

முருகு

# நூல் அகம்

## சொல்லினால் ஒரு மாளிகை




'சொல்லினாற் கவி மாளிகை கட்டினான்
சுடர்விளக்குகள் சிற்சில ஏற்றினான்
வெல்ல லாம்உல கைத்தமி ழால்' என்று தொடங்கிறது மாளிகையின் தலைவாயில். சொல்லினால் ஒரு மாளிகை எமக்குக் கட்டித் தந்திருப்பவர் கலாநிதி சி.சிவலிங்கராஜா. யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையின் தலைசிறந்த விரிவுரையாளர்: தமிழை முறையாக அறிந்தவருள் ஒருவர். 54 பக்கங்களில் யாப்பு முறைகளுக்கு அமைவாகவும், புறம்பாகப் புதுக்கவிதையாகவும் கவிதைகளை வடித்திருக்கிறார். இக் கவிதைத் தொகுப்பு திருநெல்வேலி, வான்முகில் பதிப்பகத்தாரின் வெளியீடாக உள்ளது. அட்டைப் படத்திலும் மாளிகையொன்றைக் கட்டியிருக்கின்றமை பொருத்தமானதாக மிளிர்கிறது. ஆசிரியர் இத் தொகுதியைத் தன் ஆசான் பண்டிதர் க.வீரகத்திக்கு நன்றியுடன் சமர்ப்பித்திருக்கிறார்.

அழகான மாளிகையை அழகு தமிழால் கவிஞர் சோ.பத்மநாதன் அறிமுகப்படுத்தித் தருகிறார். கற்பனைக்கு எட்டாத கடவுளைக் கவிதை வலைவீசி கற்பனைச் சிறைக்குள் தள்ளி வைத்திருக்கும் கவிஞரின் பாங்கு செப்புதற்குரியது.

'சொல் ஒன்று வேண்டும் - தேவ
சக்திகளை நம்முன்னே நிலைபெறச் செய்யும்
சொல் வேண்டும்' என்ற கவிதை வரியை உணர்ந்து தேவசக்திகளை நிலைபெறச் செய்ய முயன்றிருக்கிறார். நாத்திகம் பேசும் உலகிலே 'அம்மையே உணைச் சிலையென்று யார் சொல்லுவார்' எனக்கேட்டுச் சிலைக்கு மட்டுமன்றிக் கவிதைக்கும் உயிர் கொடுக்கும் பாங்கினைக் காணலாம்.

கலாநிதி சிவலிங்கராஜா பங்குபற்றிய சில கவியரங்குகளின் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. கவியரங்க கவிதைகள் யாவும் ஒரே நடையைப் பின்பற்றியிருப்பதாகத் தெரிகிறது. கவிதைகள் சிலவற்றில் சீர்கள் சீராக வந்துள்ளனவா? என்பதுவும், ஐயத்திற்குரியது. ஏனெனில் -

சில கவிதைகள் யாப்பின்படியாகவும், புதுக்கவிதையாகவும், கலந்து கலவைப் பாணியில் காணப்படுகின்றன.

'நல்ல புதுக்கவிதை நாளு மெழுதுகின்ற
வல்லவரு மேனை விமர்சகரும் - தொலைதந்து
வாட்டியெடுத்து வதைப்பரென நான் நினைத்து
பாட்டெழுதல் விட்டேன் பயந்து' என அவைக்கு அடங்கும் வார்த்தை நலமே! இறுதியில் 'நான் வேண்டுபவன்' என்ற தலைப்பில் சில வேண்டுதல்களை முன்வைக்கின்றார் கவிஞர்.

'ஈழத் தமிழினம்
இன்னல்கள் நீங்கியே
வாழும் வழிவரவேண்டும்.' என்ற தேசப்பற்றுடனான ஒரு வேண்டுதலை விடுக்கின்றார் பாரதி, பாரதிதாசனைப் பின்பற்றியே வேண்டுதல்கள் அமைகின்றன.

உமா தங்கவேல்

# அப்பா


மழை
நகரத்தின் கண்கங்களிலும்
ஒளி உமிழும் கண்ணாடிகளிலும்
வழியும் போதும்
தார்ச்சாலையில் மீது துப்பும் போதும்
கடனமான கூரைகள் மீது
முரசறையும் போதும்
நாம்
கண்களை மூடுவோம்
அவரைக் காண்போம்
மலையில்
தனிமையில்
தம் வாசற்படியில் இருப்பார்
தன் கைகளால் நட்டு
இன்று ஓங்கி வளர்ந்து
மாலைப் பொழுதின் நிசப்தத்தைப் போக்க
தன்னோடு உரையாடும்
ஆனைக கொய்யா மரங்கள் மீது
இதே மழை பொழிவதைப் பார்ப்பார்!

அவர் தனித்துப் போனார்
நாம் வளர்வதையும்
இழுபறிப்படுவதையும்
நினைவுகளுககே இடமில்லாதபடி
உலகின் சுழற்சி
எம்மை வாரிச் செல்வதையும்
அவர் கண்டிருக்கிறார்.

அவர் புத்திசாலி
வேறு நாற்றுக்களும் நட்டிருக்கிறார்
அவை
அவர்வாசலில்
கிளைகளை ஒச்சி நிழல்தருகின்றன
எம்மைப் போல்
அவை அவரைக் கைவிடா

ஆங்கில மூலம்:- உபாநந்த கருணாதிலக
தமிழ் மூலம்:- சோ.பத்மநாதன்

# பாவம் விட்டுவிடுங்கள்



உதிர்ந்துவிட்ட இறகுகளுடன்
உதிரம் கொட்டும் சமாதானப் புறா
மருந்திட்டு காயமாற்றி
மீண்டும் சிறகு விரிக்க முயல்கையிலே
வீழ்த்துவதற்காய் சில கரங்கள்
பாவம் விட்டுவிடுங்கள்
பறக்கட்டும் நிரந்தமாய்
இல்லையேல்
இலங்கையில் விஞ்சுவது
விறகாய் தானிருக்கும்
அதை எரிப்பதற்கு - வாமனன்-

ப
ற
த்
த
ட
டு
நீ

# நேரம்

நாளை காலை சீக்கிரம் எழுந்திருக்க வேண்டுமென்று மணிக்கூட்டின் மணி ஓசையை சரி செய்துவிட்டு தூங்கிவிட்டேன்.


காலை ஏழு மணிக்குத்தான் எழுந்திருக்க முடிந்தது. மணியும் அடிக்கவில்லை. அவசரமாக காலை கடனை முடித்துவிட்டு. அன்றைய நாள் செய்தித்தாள்கள் எல்லாவற்றையும் புரட்டிப் பார்த்தேன். எனக்குத் தகுந்த வேலை கிடைக்குமா என- வேலைக்கு ஆள் தேவையென விளம்பரம் ஒரு பக்கத்தில் பார்த்துவிட்டு, வண்டிக்காகக் காத்திருந்து வரும் வண்டியெல்லாம்நிரம்பி வழிய மக்கள் கூட்டம். அடுத்த வண்டியில் ஏறுவோம். அடுத்த வண்டியில் ஏறுவோமென்று பார்த்துப் பார்த்துக் கூட்டம குறைவாக வந்த வண்டியில் ஏறி வேலைத்தள வாசலில் இறங்கி வாயிலின் உள்ளே காலெடுத்து வைக்கும்போது, நிறையக் கூட்டம். வரிசைப்படுத்தி நின்றார்கள். நான் நூறாவது ஆளாக நின்றேன. அங்கே இருபது பேருககுத்தான் வேலை. தெரிவு செய்து திறமையானவர்களுக்கு வேலை கொடுப்பார்கள். ஒரு மணித்தியாலம் ஆகிவிட்டது. வரிசையில் நின்றவர்களும் குறைந்தபாடில்லை. அதற்குள் அலுவலக நிர்வாகி ஒருவர் வெளியே வந்து. தேவையான ஆட்களைத் தெரிவு செய்துவிட்டார்கள். நீங்கள் எல்லோரும் போகலாமென்றார். முதல் ஆளாக நேரத்தோடு வந்தும் வேலை கிடைக்கவில்லை என்று தனக்குள்ளே முணுமுணுத்துக்கொண்டு சென்றார் ஒருவர். எனக்குப் பின்னே நின்ற ஒருவர் இதுக்குத்தான் நேரத்தோடு வரவேண்டுமென்று சொல்லிச் சென்றார். வந்தவர்கள் எல்லோரும் கேட்கும்படி எனக்குள்ளே நினைத்து சிரித்தேன். இதுவா? அதுவா? நேரமென.

துன்னாலை செல்வம்.


அயலக அரசியல்...

கே.ரீ.கணேசலிங்கம்

# இந்தியா : தேர்தல் களம் தயாராகிறது...









உலகத்திலேயே பெரிய ஜனநாயக நாடு என வர்ணிக்கப்படும் நாடாக இந்தியா விளங்குகிறது. அத்தகைய ஜனநாயக நாடு மற்றுமோர் நாடாளுமன்ற தேர்தலை முன்கூட்டியே நடாத்த தயாராகிவருகின்றது. சுதந்திர இந்தியா அரை நூற்றாண்டை தாண்டிய நிலையில், பிரித்தானியர் அறிமுகப்படுத்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தையே தொடர்ந்தும் பின்பற்றி வருகின்றது. பிரித்தானிய மாதிரியிலான நாடாளுமன்ற ஜனநாயகத்தை பின்பற்றியதனால் எந்தவித மாற்றத்தையோ, முன்னேற்றத்தையோ இந்தியா அடையவில்லை என்ற விமர்சனத்துடன், ஜனநாயக அரசியல் கலாசாரத்தில் முன்னேற்றம் எதனையும் எட்டவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகின்றது. போலியான, ஏமாற்றுத்தனமான ஜனநாயக விழுமியங்களைக் கொண்டு இன்னும் எத்தனை ஆண்டுகள் இந்திய மக்கள் ஏமாற்றப்படப்போகிறார்கள் என்பதே எஞ்சியுள்ள செய்தியாகும். அவ்வாறு ஏமாற்றுகின்ற ஜனநாயகத்தை கைவிட வேண்டுமாயின், ஆளும் அரசியல் தலைமைகளில் மட்டுமல்ல, இந்திய மக்களிடமும் மாறுதல் ஏற்படுதல் வேண்டும். இவ்வாரம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ள இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கான நிலைவரத்தை அவதானிப்போம்.

சுதந்திர இந்தியாவின் பல தசாப்தங்களைக் காங்கிரஸ் கட்சி - தனிப்பெருங் கட்சியாகச் செயல்பட்டு, ஆட்சியில் இடம் பிடித்துவந்தது. 1970 களின் பிற்பகுதியிலிருந்து அத்தகைய ஆதிக்கம் உடைந்து, 1990 களின் பிற்பகுதியிலிருந்து இரு கட்சி அரசியலை பேணும் நாடு என்ற பெயரை இந்தியா தக்கவைத்துக்கொண்டது. பாரதீய ஜனதாக் கட்சியின் வரலாறு மிகக் குறுகியதானபோதும், காங்கிரஸுக்கு நிகராக ஆட்சியைச் செய்யமுடியும் என்பதை பிரதமர் வாஜ்பாய் நிரூபித்துக் காட்டியுள்ளார். வாஜ்பாயின் தலைமையில் ஏற்பட்ட மாறுதலுக்கும், சாதனைகளுக்கும் முன்னால், காங்கிரஸ் நின்றுபிடிக்குமா என்பது சந்தேகத்துக்குரியதாகவே உள்ளது.

காங்கிரஸ் கட்சிக்கு - நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் எப்படி அமையும் என்பது அதன் கூட்டணிக் கட்சிகளிலும், தேர்தல் பிரசார தந்திரத்திலுமே தங்கியுள்ளது. அநேகமாக பா.ஜ.க. கூட்டணிக் கட்சிகள் காங்கிரஸுடன் கூட்டுச்சேர ஆர்வம் காட்டிவருகின்றன. அந்தவகையில், கூட்டணிக்கான திட்டமிடலில் பா.ஜ.கட்சியைவிட, காங்கிரஸ் ஆதிக்கம் செலுத்தும்போலவே தென்படுகின்றது. அதற்கு அத்திவாரமாகத் திராவிட முன்னேற்ற கழகம் - பா.ஜ.கட்சியிலிருந்து விலகி, காங்கிரஸில் சேருவதற்கான பேச்சுக்களில் ஈடுபட்டுவருகிறது.

தமிழ் நாட்டையும், கருணாநிதியின் அரசியல் எதிர்காலத்தையும் பொறுத்து தி.மு.க. முன்வைத்துள்ள கூட்டணிக்கான அணுகுமுறை நியாயமாகவே அமையலாம். கருணாநிதியின் அரசியலில் இதுவொன்றும் பெரிய விடயமல்ல. வரப்போகும் தேர்தலில் பா.ஜ.க. வெற்றிபெற்று, காங்கிரஸ் தோற்றுவிட்டால், கூட்டணியின் கதை மீண்டும் மாறிவிடும். இத்தகைய அரசியல் கட்சிகளுக்குக் கொள்கையோ, விசுவாசமோ அல்லது அரசியல் கலாசாரமோ கிடையாது. இது இந்தியாவுக்குப் பொதுவானது. அதிலும், தமிழ் நாட்டுக்கு மேலும், மேலும் பொருத்தமானதும், பொதுவானதுமாகும்.

இந்த நிலையில், காங்கிரஸ் கட்சி மதச்சார்பின்மை என்று கூறிக்கொண்டு திரட்டவுள்ள கூட்டணிக்கு, முதலாளித்துவக் கட்சிகள் மட்டுமல்ல இடதுசாரிக் கட்சிகளும் (?) ஒத்துழைப்பு வழங்கவுள்ளன. அவையும் பெருமளவுக்குக் கருணாநிதியை மையமாகக் கொண்டே கூட்டணிக்கான தயார்ப்படுத்தலை மேற்கொண்டு வருகின்றன. இதில், காங்கிரஸ், பா.ஜ.கட்சி அடுத்த நிலையில் மூன்றாவது கூட்டணி அமைப்பது பற்றிய கருத்துக்களும் நிலவுகின்றது. அத்தகைய மூன்றாவது அணி பற்றிய செய்திக்கு, மீண்டும் ஜனதாதள் தலைமை தாங்கத் தயாராவதும், கருணாநிதி அதன் பிரதான அம்சமாக்கப்பட வேண்டும் என்பதும் அவர்களது கருத்துக்களாக உள்ளன. குறிப்பாக முன்னாள் பிரதமர் வி.பி.சிங் - பா.ஜ.க. கூட்டணியிலிருந்து விலகிய ராம்விலாஸ் பாஸ்வான் மற்றும் இடதுசாரிக் கட்சிகள் என்பன முயன்றுவருகின்றன. அப்படியான சூழல் ஏற்படுவதும், மதச்சார்பின்மை என்ற கருத்து நிலையை நிறுத்தி, மூன்றாவது அணி உருவாவதும் காங்கிரஸ் கட்சிக்கே அபாயகரமானது.

காங்கிரஸின் தேர்தல் பிரசாரத்தில் முதன்மை வகிக்கக்கூடிய விடயமாக இருப்பதும் மதச்சார்பின்மைதான். அத்துடன், நேரு பரம்பரை என்ற் பாரம்பரியமான அணுகுமுறையும், காந்தியின் தேசியமுமே காங்கிரஸால் முன்வைக்கக்கூடிய பிரதான பிரசாரமாகும். இவற்றைவிட அவர்கள் பா.ஜ.கட்சியைத் தோற்கடிக்கக்கூடியதாக ஊழல் குற்றச்சாட்டை பயன்படுத்த எத்தனிக்கமுடியும். அது பரஸ்பரம் சேற்றைவாரிப் பூசும் காட்சியாகவே முடியுமே அன்றி, காங்கிரஸுக்கு தனித்து சாதகமான சூழலை ஏற்படுத்திவிடாது. அண்மையில் நடந்துமுடிந்த மாநிலங்களுக்கான தேர்தல் நல்ல பாடத்தை காங்கிரஸ் கட்சிக்கு ஏற்படுத்தியிருக்கும். டெல்கியைத் தவிர ஏனைய மூன்று மாநிலங்களிலும் பா.ஜ.கட்சிக்குச் சாதகமான சூழலே காணப்பட்டது. காங்கிரஸ் கட்சியிடமிருந்து ஆட்சியை பறித்த சம்பவமும் நடைபெற்றிருந்தது. ஆனால், இதுபற்றி அப்போதும், தற் போதைய சூழலிலும் பொதுவான கருத்தொன்று ஏற்பட்டது. அதாவது, மாநிலத்தில் ஓர் அரசியல் கட்சியை ஆட்சியில் அமர்த்தினாலும், மத்தியில் இன்னோர் கட்சியை அமர்த்தும் இயல்பு இந்திய வாக்காளரிடமுண்டு என்பதாகும். இதை முற்றாக நிராகரித்துவிடமுடியாது. ஆனாலும், முழுமையாக ஏற்றுக்கொள்ளவும் முடியாது. இந்திய வாக்காளர் எப்போது ஒரே மாதிரி இருப்பதில்லை. நேரு, இந்திராகாந்தி ஏன் ராஜீவ் காந்தியின் காலத்திலும் - மாநிலத்திலும், மத்தியிலும் ஒரேகட்சியை ஆட்சியில் அமர்த்திய நிகழ்வுகள் பல மாநிலங்களில் நிகழ்ந்துள்ளன. அதைவிட நேரு, இந்திராகாந்தி பற்றியோ, மகாத்மாகாந்தி பற்றியோ ஆழமான புரிதலற்ற வாக்காளர்கள் வாக்களிக்கும் தகைமையை அடைந்துவிட்டனர். அத்தோடு, காந்தியத்தின் கொள்கையை நிராகரிக்கும் வாக்காளர்கள் அதிகரித்துவிட்டனர். இதனால், காங்கிரஸ் கூட்டணி எதிர்பார்த்த இலக்கை அடையுமா என்பது சந்தேமாகவே உள்ளது. அவ்வாறாயின், பா.ஜ.கட்சியின் ஆட்சியில் ஒரு மாற்றத்தைச் செய்யவேண்டிய நிலைக்குரிய உணர்வை இந்திய மக்கள் பெறவேண்டும். அப்போது மட்டுமே, காங்கிரஸ் கட்சிக்கு - தேர்தல் பிரகாசமாக இருக்கும்.

மறுபக்கத்தில் பா.ஜ.கட்சியின் தேர்தலுக்கான ஆயத்தங்கள் அமோகமாக இருப்பதுடன், முன்கூட்டியே தேர்தலை நடத்துவதற்கான சூழலையும் அது உருவாக்கியுள்ளது. பா.ஜ.கட்சியின் சாதனைகளைப் பட்டியலிடுவதுடன், பிராந்திய, சர்வதேச அரசியலைக் கையாண்ட மாதிரி களையும் இந்தியாவின் தனித்துவத்தை தக்கவைத்ததையும், முதன்மைப் படுத்துவதே வாஜ்பாயின் தந்திரமாகும். வாஜ்பாய் என்ற தனிமனிதனுக்கு இருக்கும் செல்வாக்கும், தனித்துவமும், பா.ஜ.கட்சிக்கு விசேடமான அந்தஸ்த்தாகும். காங்கிரஸ் கட்சி தனது பல தசாப்த கால ஆட்சியில் சாதிக்க முடியாததை நிறை வேற்றிக் காட்டியவர் வாஜ்பாயும், அவரது பா.ஜ.கட் சியுமாகும்.

**இந்தியாவின் பொருளாதார, இராணுவ, தகவல் தொழில்நுட்பம் போன்ற விடயங்களில், பா.ஜ.க. என்றுமில்லாத சாதனைகளை நிறைவேற்றியுள்ளது. இத்தகைய சாதனைகளைப் பட்டியலிட்டாலே, தேர்தல் பிரசாரம் பூரணத்துவமானதாக அமையும். கடந்த ஆண்டு பா.ஜ. கட்சியின் பொருளாதார இலக்கு சாத்தியப்பட்டிருப்பதுடன், இந்தியாவை 2020 ஆண்டில் பெரும் வல்லரசாக மாற்றும் இலட்சியத்தையும், திட்டமிட்டு பிரசாரப்படுத்த வாய்ப்புள்ளது.**

இந்தியாவின் பொருளாதார, இராணுவ, தகவல் தொழில்நுட்பம் போன்ற விடயங்களில், பா.ஜ.க. என்றுமில்லாத சாதனைகளை நிறைவேற்றியுள்ளது. இத்தகைய சாதனைகளைப் பட்டியலிட்டாலே, தேர்தல் பிரசாரம் பூரணத்துவமானதாக அமையும். கடந்த ஆண்டு பா.ஜ.கட்சியின் பொருளாதார இலக்கு சாத்தியப்பட்டிருப்பதுடன், இந்தியாவை 2020 ஆண்டில் பெரும் வல்லரசாக மாற்றும் இலட்சியத்தையும், திட்டமிட்டு பிரசாரப்படுத்த வாய்ப்புள்ளது.

இராணுவரீதியில் அணுவாயுதப் பரிசோதனைகள், ஏவுகணைப் பரிசோதனைகள்- இராணுவ தொழில்நுட்ப வளர்ச்சியைக் கணிசமாக மாற்றியுள்ளது. இராணுவத்தின் விமானப்படை, கடற்படை, தரைப்படை எல்லாமே சரா்சரி வளர்ச்சியை நோக்கியதுடன், வாஜ்பாய் அரசின்கீழ் இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு முன்னேற்றத்தை அடைந்துள்ளது. மேலும் வாஜ்பாய், அரசியல் புரட்சிகள் பலவற்றை நிறைவேற்றிக்காட்டினார். தனித்து ஆட்சி செய்யமுடியாதது என்ற சூழலை இந்தியாவுக்கு ஏற்படுத்தியதுடன், பா.ஜ.கட்சியின் இஸ்லாமிய எதிர்ப்புவாதத்தினால் கூட்டணி தேவை என்பதைக் காட்டிய வாஜ்பாய், அரசியல் புரட்சிக்கு வித்திட்டுள்ளார். காங்கிரஸ் அல்லாத கட்சியொன்று அதிலும் அறுதிப் பெரும்பான்மை இல்லாத கட்சியொன்று தனது ஆட்சிக் காலத்தைச் சாத்தியப்படுத்தியதுடன், இந்திய அரசியல் அமைப்பில் 356 ஆவது சரத்தை பாவிக்காது தவிர்த்தமையால், ஆரோக்கியமான அரசியல் சூழலை உருவாக்கியுள்ளவராக வாஜ்பாய் விளங்குகிறார்.

பெண்களுக்குரிய 33 சதவீத இடத்திற்கான சட்டமூலத்தின் நிறைவு சாத்தியப்படாத போதும், பா.ஜ.கட்சிக்குச் சகப்புள்ளியாகவே அவ்விடயம் அமையவுள்ளது. 33 சதவீத இட ஒதுக்கீட்டுக்கான ஆதரவைப் பெறுவதில் பா.ஜ.க. அடைந்த நெருக்கடி கணிசமான செல்வாக்கை பெண் வாக்காளர் மத்தியில் ஏற்படுத்தவுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக - உலகத்தையும், பிராந்திய சக்திகளையும் வாஜ்பாய் கையாண்டவிதம், சிறப்பான செல்வாக்கை பா.ஜ.கட்சிக்கு ஏற்படுத்திக் கொடுக்கக்கூடியது. வல்லரசுகளைக் கையாளும்போதும், பிராந்திய சக்திகளால் இந்தியா காட்டிக்கொடுக்க முயலும்போதெல்லாம் - வாஜ்பாய் நடந்துகொள்கின்ற விதமும், அணுகுமுறையும் பா.ஜ.கட்சியின் தேர்தல் வெற்றிக்கு கைகொடுக்கக்கூடியது. சீனா, ரஷ்யா என்பவற்றையும், அயல் நாடுகளின் பிரச்சனைகளையும் - பா.ஜ.க. சுமுகமான, அமைதியான போக்கைக் கையாண்டு, இந்தியாவின் அரசியல், பொருளாதார, இராணுவ தேவைகளையும், நலன்களையும் சாத்தியப்படுத்திவிடுகின்றது.

ஆனால், தமிழ் நாட்டுக் கூட்டணிக் கட்சியான தி.மு.கட்சியை பா.ஜ.க. கோட்டைவிட்டது துரதிர்ஷ்டவசமான நிகழ்வாகவே அமையவுள்ளது.

ஒன்று - தென்மாநிலங்களில் பா.ஜ.க. செல்வாக்கு இழந்திருப்பது. இரண்டாவது- ஜெயலலிதாவின் கடந்தகால அரசியல் குத்துக்கரணமும், வாஜ்பாயின் அரசியலுக்கு ஏற்பட்ட நெருக்கடியும் குறிப்பான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. மூன்றாவது - தமிழ் நாட்டின் அ.இ.அ.தி.மு.க. செல்வாக்கை ஆட்சியாக மாற்றிவருகின்றது என்பதாகும்.

ஆனாலும், சாதனைப் பட்டியலை முதன்மைப்படுத்தி அதிக ஆசனங்களைப் பிடிக்கலாம் என்பதே வாஜ்பாயின் திட்டமிடலாகும். இந்தியாவில் பாகிஸ்தானைவிட அதிக முஸ்லிம்கள் இருப்துடன், இந்து மதவாதத்திற்கு எதிரான உணர்வலையால் அறுதிப் பெரும்பான்மையை பா.ஜ.க. பெறுமா என்பது சந்தேகமானதாகும்.

எனவே, காங்கிரஸ் கட்சியைவிட முழு இந்தியாவிலும் பா.ஜ.கட்சியின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. இந்தநிலை தற்போ துள்ள சூழலை வைத்துக்கொண்டு அலசும்போது தென்படுவதாகும். எதிர்காலத்தில் ஏற்படும் மாறுதல்கள் அத்தகைய எதிர்பார்க்கையைப் பலவீனப்படுத்தலாம். அதுகூட அரிதாகவே தென்படுகிறது.

காங்கிரஸ் பிரதம வேட்பாளரே இந்தியாவிற்கு அந்நியமானவர் என்பதால், இந்திய வாக்காளர்களால் காங்கிரஸ் நிராகரிக்கப்பட வாய்ப்புண்டு. இந்தியா மீதும், இந்தியத் தேசியத்தின் மீதும் அதிகம் விசுவாசும்மிக்க இந்திய வாக்காளர்கள் - அப்படியான வேட்பாளரையோ, காங்கிரஸையோ ஆதரிப்பதில் கவனம் செலுத்த மாட்டார்கள்.

அத்துடன், சோனியாகாந்தியை கட்சியிலிருந்து நீக்கிவிட்டும், காங்கிரஸை உருவாக்கும் இயல்பு காங்கிரஸ் கட்சிக்காரருக்கு இல்லை. இதனால், காங்கிரஸ் - சோனியாவின் தலைமையாலேயே அதிக வெற்றி வாய்ப்புக்களை இழக்கலாம். அவ்வாறே பா.ஜ.கட்சியின் வெற்றிக்கோ, தோல்விக்கோ பின்னால் கட்சியின் பிரதம வேட்பாளரான அத்வானி உருவெடுக்கும் நிலையும், தேர்தலுக்குப் பின்பு ஏற்படலாம். வாஜ்பாயின் அணுகு முறைக்குப் புறம்பான நடவடிக்கையில் அத்வானி ஈடுபடுவார் என்பதையும் மறந்து விடமுடியாது.

மொத்தத்தில் அரசியல் கட்சிகள் தமக்கிடையேயுள்ள போட்டிகளை முன்னிறுத்தி, தேர்தலின் வெற்றிபெறுவதும், சாதனைகளைப் பட்டியல்படுத்தி வாக்குகளை சேகரிப்பதும் இலட்சியமாகவே கொண்டிருக்கின்றனவே அன்றி - தேசியத்தையோ, தேசத்தின் கௌரவத்தையோ காப்பவையாக இல்லை. போலிகளை, ஏமாற்றுத்தனத்தை இனங்காண்பதற்குப் பதிலாக, தமக்கிடையே அடையாளத்திற்காக மோதுகின்றன. காலனித்துவத்துக்குள்ளிருந்து விடுதலை என்று கூறிக்கொண்டு மீண்டும் அடிமைகளாகவே வாழ்கின்றனர்.

இதிலிருந்து இந்திய அரசியல் கட்சிகளோ, அரசியல் தலைமைகளோ விடுபடாதது மட்டுமல்ல, வாக்காளரையும் விழிப்பற்ற நிலைக்குள் தள்ளி மூழ்கடிக்க வைத்துள்ளனர் என்பதே யதார்த்த நிலையாகவும் உள்ளது.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை*
*முறைகாக்கும் முட்டாச் செயின்.*

திருக்குறள்.

## நமது நோக்கு

# தேர்தல்கள் எதனை அறிவிக்கப் போகின்றன...?

மாகாண சபைகள் கலைக்கப்பட்டு மீண்டும் அவற்றிற்கான தேர்தல்கள் மிக விரைவிலேயே நடத்தப்படலாம் என்று செய்திகள் வெளியாகத் தொடங்கியுள்ளன.

நாட்டின் நாடாளுமன்றத்திற்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான முரண்பாடுகள் வலுத்து வரும் இவ்வேளையில், அதிகாரப் போட்டியில் யார் சக்த வாய்ந்தவர் என்பதனை பரீட்சித்துப் பார்ப்பதற்கான ஒரு களமாகத் தேர்தலை பயன்படுத்த வேண்டிய நிலை ஆளும் ஐ.தே.முன்னணிக்கும், ஜனாதிபதியின் தலைமையிலான பொ.ஐ.முன்னணிக்கும் ஏற்பட்டுள்ளது தவிர்க்க முடியாத ஒன்றாகியுள்ளது.

உண்மையில் ரணிலைப் பொறுத்த வரையில், இப்போதுள்ள நிலையில் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள இது தனக்குச் சாதகமான சூழ்நிலை என்பதனை உறுதியாக நம்பும் ஒருவராகவே உள்ளார்.

தனது இரண்டாண்டுகால ஆட்சியில் சமாதானம் என்ற ஒரு சொல்லைப்பயன்படுத்தியே தனக்கு ஆதரவான ஒரு அழுத்தமான அரசியல் சூழலை தேசிய மட்டத்திலும், சர்வதேசிய மட்டத்திலும் வலுவாகக் கட்டியெழுப்பி வைத்துள்ளார் என்பது ஓரளவுக்கு நிஜமான விடயமே.

சமாதான முயற்சிகளில் - அதாவது இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அமைதிப்பேச்சுக்களில், ரணில் எந்தளவுக்குத் தூய்மையோடும், விசுவாசத்தோடும் இயங்கினார் என்பது கேள்விக்குரிய விடயமாக இருந்தாலும், அந்த முயற்சியில் தான் மிகுந்த ஈடுபாட்டோடு செயற்படுவதாக காட்டிக்கொள்வதன் மூலம், சமாதானத்தை நேசிக்கும் மக்களின் ஆதரவையும், சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புடன் கூடிய நம்பிக்கையையும் அபரிமிதமாகப் பெறும் செயல்முறைகளுக்கான மூலோபாயங்களை ஓரளவுக்கு வெற்றிகரமாக கையாண்டார் என்பதில் ஐயமில்லை.

ஆகவே, இன்று அவரை தேர்தல்களை எதிர்கொள்ளும் மனோநிலை நிறைந்தவராக உருவாக்கியுள்ளது.

இதற்கு மாறாக சந்திரிகாவோ, தனது அதிகார வலுவை சர்வாதிகாரத் தனத்துடன் பயன்படுத்தவதன் மூலம் ரணிலின் அரசுக்கும், அவர் மேற்கொண்டு வந்த சமாதான முயற்சிகளுக்கும் நெருக்கடிகளையும், குழப்பத்தையும் ஏற்படுத்தி, அவருக்கு அரசியல் ரீதியில் அவமதிப்புக்களை உருவாக்கும் முனைப்புடன் செயற்பட்டார் என்றே கூற வேண்டும்.

ரணில் ஒருபோதும் பேரினவாத சித்தாந்தங்களுக்கு முரணாக தமிழ் மக்களுக்கு நியாயபூர்வமாக, ஆதரவாகவோ செயற்படும் துணிச்சல் கொண்டவரல்ல என்பதை சந்திரிகா அவரது கடந்தகால அரசியல் நடவடிக்கைகள் ஏற்படுத்திய அனுபவங்கள் மூலம் அறிந்தே வைத்துள்ளார்.

ஆனாலும், அவர் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றார் என்றும் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தினை ஏற்படுத்திவிட்டார் என்றும் பொய்யான பிரசாரங்களைக் கட்டவிழ்த்துவிட்டு அதனையே, காரணம் காட்டி அரசாங்கத்தின் அதிகாரபூர்வ இயக்கத்தை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் அரசின் மீதான தனது மேலாதிக்க வலுவுடன் கூடிய அழுத்தத்தை பிரயோகித்தமையானது சமாதானத்தையும், அது தொடர்பான ரணிலின் நகர்வுகளையும் இலக்குவைத்ததாகவே இருந்தது.

இந்த இரண்டும் மக்களிடையே, ரணிலுக்கு செல்வாக்கை அதிகரிக்கவைத்துவிடும் என்பதுடன் இது தொடர்பான சர்வதேச ஆதரவானது ரணிலை மேலும் பலப்படுத்தும் என்ற அச்சம் சந்திரிகாவுக்கு நிறையவே இருந்தது. இருந்தாலும் தனது அதிகாரவலுவைப்பயன்படுத்தி அரசை முற்றாகவே பதவி நீக்கி புதிதாக தேர்தல் ஒன்றை நடத்தி ஐ.தே.முன்னணியை மக்கள் ஆதரவுடன் தோற்கடித்துவிடமுடியும் என்ற நம்பிக்கை அவருக்கு இருக்கவேயில்லை. தனது ஏழாண்டுகால, ஆட்சிக்கால அவலங்களை மக்கள் வெறும் இரண்டே ஆண்டுகளில் மறந்துவிடுவார்கள் என அவர் நம்பவில்லை.

எனவேதான் ஜே.வி.பி போன்ற, அவர் தோழமை கொள்ள முயலும் கட்சிகளும் ஏனைய இனவாத அமைப்புக்களும் ரணிலின் அரசைக்கலைக்குமாறு அழுத்தங்களைக் கொடுத்த போதும் அவர் அசையவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனாலும், தனது நகர்வுகளுக்கு ரணில் மேற்கொண்டு வரும் எதிர்நகர்வுகள் தவிர்க்கவே முடியாத ஒரு பொதுத் தேர்தலை தான் நடத்த வேண்டிய சூழலுக்கு தன்னை தள்ளிவிடுமோ என்ற அச்சம் சந்திரிகாவுக்கு ஏற்பட்டுள்ளதில் வியப்பில்லை.

எனவேதான், ஒரு பொதுத்தேர்தலுக்கு முகம் கொடுக்க முன்னர் மக்களின் மனோநிலையை நாடிபிடித்துப்பார்த்து கருத்துக்கணிப்பீடு ஒன்றை மேற்கொள்ள அதற்கு முன்னோடியாக மாகாணசபைத் தேர்தல்களை நடத்தும் யோசனைக்கு ஜனாதிபதி வந்துள்ளார் என்பது தெளிவு.

மாகாணசபைத்தேர்தல்களில் ரணிலின் ஐ.தே.முன்னணி வெற்றிபெறுமேயானால் பொதுத்தேர்தல் குறித்த எண்ணத்தையே ஜனாதிபதி கைவிடவேண்டிய நிலை ஏற்படும் என்பதில் ஐயமில்லை.


இதேவேளை, மாகாணசபைத் தேர்தல்கள் சந்திரிகாவுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் அமைந்தால், சூட்டோடு பொதுத் தேர்தலையும் நடத்தும் நிலை அவருக்கு ஏற்படலாம்.

பொதுத்தேர்தலும் அவருக்குச் சாதகமாக அமையுமேயானால் சமாதானத்திற்கு அது பாதகமாகவே அமையும்.

தேர்தல் வெற்றிதோல்விகள் தான் சமாதானத்தின் எதிர்காலத்தை தீர்மானிப்பதாக அமையும் என்பதை சமாதானத்தை நேசிக்கும், அமைதி விரும்பும் மக்கள் அனைவரும் அறிவர்.

வரப்போகின்ற தேர்தல்கள் சந்திரிகாவா, ரணிலா மக்களின் ஆதரவைப்பெறுவார்கள் என்பதை மட்டுமல்ல தென்பகுதி மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்களா என்பதையும் தெளிவுபடுத்துவதாகவே இருக்கும்.

## நாடும் நடப்பும்




### அத்துருகிரிய மிலேனியம் சிற்றி விவகாரம்

# இராணுவ நீதிமன்று அளித்த தீர்ப்பு ஆணைக்குழு விதப்புரைக்கு முரண்!

(கொழும்பு)

அத்துருகிரிய மிலேனியம் சிற்றி பாதுகாப்பு இல்லம் தொடர்பாக விசாரணைசெய்த இராணுவ நீதிமன்றத் தீர்ப்பிற்கும், ஜனாதிபதி ஆணைக்குழுவின் விதப்புரைக்கும் இடையே பல முரண்பாடுகள் நிலவுகின்றன.

இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் அமைச்சர்கள் உரையாற்றும்போது, வேறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்தனர்.

அதாவது, நாடாளுமன்றத் தெரிவுக்குழு அரசியலமைப்புக்கு முரணாக அமைக்கப்படவில்லை. ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ செயற்பாடு குறித்து, நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்த முடியாது என்றாலும், சில விதிவிலக்குகளின்கீழ் அதாவது, அவரது செயற்பாடுகள் குறித்து நாடாளுமன்றத்தில் கேள்விகள் எழுப்பமுடியும்.

இராணுவ நீதிமன்ற அறிக்கையும், ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுகின்றது. இதனால், சில சட்டச்சிக்கல்கள் எழ இடமுண்டு. இந்தச் சம்பவம் தொடர்பாக ஆராய்ந்து, நாட்டு மக்களுக்கு உண்மை நிலையை வெளிப்படுத்தவேண்டியது நாடாளுமன்றத்தின் கடமையாகும்.

நாடாளுமன்றம் பாரம்பரிய சட்டதிட்டங்களைக்கொண்டதொரு கௌரவமானசபை ஆகும். இந்தச்சபை - அரசியலமைப்பு மற்றும் நிலையியற்சட்டம்மூலம் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். மிலேனியம் சிற்றி சுற்றிவளைப்பு விவகாரம் தொடர்பாக நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. நாட்டின் நீதிச்சுதந்திரத்திற்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இருப்பினும், நாடாளுமன்றத்திற்குள் நீதிமன்ற விடயங்கள் தலையிடமுடியாது. எவ்வாறு இருப்பினும், நாட்டை யார் ஆண்டாலும் நாட்டின் சட்டத்திற்கும், ஒழுங்குக்கும் மதிப்பளிக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மிலேனியம் சிற்றி பாதுகாப்பு இல்ல விவகாரம் குறித்து சபையில் விவாதம் நடத்தமுடியாது. அது தொடர்பாக நீதிமன்ற வழக்கு விசாரணை இருக்கின்றது. இதனை அரசாங்கம் மறைமுகமாக ஏற்றுக்கொள்கின்றது. இதனால், நீதித்துறையில் அரசாங்கம் தலையிடுவதாக அமைகிறது. ஆகையால் இந்த விடயம் ஒரு சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

மிலேனியம் சிற்றி விவகாரம் குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்படுவதற்கு எதிரணியினர் எதிர்ப்புத் தெரிவக்கின்றனர். இதன் மர்மம் என்ன. அதன் உண்மை வெளியாகிவிடலாம் என்ற அச்சமா? இதற்கு ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகள் இணைந்து ஆதரவுநல்கவேண்டும் என நாடாளுமன்றத்தில் அமைச்சர்களால் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராமேஸ்வரம் கடல் திடீர் கொந்தளிப்பு; விடுதலையான மீனவர் ஒப்படைப்பு தாமதம்

இராமேஸ்வரம் கடலில் திடீரென ஏற்பட்ட கொந்தளிப்பால், இலங்கைச் சிறையிலுள்ள இராமேஸ்வரம் மீனவர்கள் 18 பேரும் தமிழ்நாடு செல்லவில்லை. இதனால், மீனவர்களின் குடும்பங்கள் ஏமாற்றமடைந்தன.

இராமேஸ்வரத்திலிருந்து கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதி விசைப்படகுகளில் மீன்பிடிக்கச்சென்ற மீனவர்களின் 6 விசைப்படகுகளையும் 24 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் மடக்கிப்பிடித்து, மன்னார் பொலிஸாரிடம் ஒபபடைத்தனர். பின்னர் மீனவர்கள் 24 பேரும் சர்வதேச கடல் எல்லையைத் தாண்டிவந்ததாகக் குற்றஞ்சாட்டி, வழக்குப் பதிவுசெய்து மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

இதில் 6 பேரையும் தவிர 18 மீனவர்களையும், நீதிமன்றம் விடுதலை செய்தது. விடுவிக்கப்பட்ட மீனவர்கள் 18 பேரையும் நேற்றுமுன்தினம் இராமேஸ்வரத்திற்கு அனுப்பிவைப்பதாக இலங்கை கடற்படை அறிவித்தது.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் அதிகாலை 5 மணியளவில் மண்டபம் கடலோர காவற்படை நிலையத்திலிருந்து மீட்புக்கப்பல் - இலங்கை நடுக்கடலில் இலங்கை கடற்படையினருக்காகக் காத்திருந்தபோதும், கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பால் விடுதலையான மீனவர்களை அழைத்துவரமுடியாமல் போனதால், மண்டபம் கடலோர காவற்படை கப்பல் அதிகாரிகளிடம் மீனவர்களை இன்று ஒப்புடைக்கமுடியாது என, இலங்கை கடற்படை அதிகாரிகள் தெரிவித்ததுடன், மண்டபம் கடலோர மீட்புக்கப்பல் நேற்றுமாலை வெறுங்கையுடம் மண்டபம் கரைக்குத் திரும்பியது.

மீனவர்கள் இன்று வருவார்கள் என ஆவலுடன் எதிர்பார்த்த மீனவர்களின் குடும்பங்கள் பெருத்த ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றன.

### கிருஷாந்தி கொலை வழக்கு

# உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வரையறையின்றி ஒத்திவைப்பு

கிருஷாந்தி குமாரசாமி படுகொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக மரணதண்டனை விதிக்கப்பட்ட 5 நபர்களும் -கொழும்பு உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்த மனுவையடுத்து, இறுதித் தீர்வு காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கிருஷாந்தி குமாரசாமி கொலை வழக்கில் சந்தேகநபர்களில் 5 நபர்களுக்கு மரணதண்டணை - கொழும்பு மேல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டபோதும், மரணதன்டனை வழங்கப்பட்ட ஐவரும் தமக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டமுறை தவறானது எனக் கொழும்பு உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தனர். இதனையடுத்து, இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்த நீதிபதி- இரு தரப்பினரதும் தொகுப்பு வாதங்களை வாசிக்கும்படி கேட்டு, இந்த வழக்குத் தொடர்பான இறுதித் தீர்ப்பை வழங்காது, காலவரையறையின்றி வழக்கினை ஒத்திவைத்தார். (01)

# சமாதான முயற்சிகளைத் தொடர்வது ஜனாதிபதி சந்திரிகாவின் கடமை!

### பொ.ஐ.மு.பிரமுகர் பௌசி கூறுகிறார்

சமாதான முயற்சிகளைத் தொடரும்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் விடுத்துள்ள சவாலை ஏற்றுக்கொள்ளும்படி, பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி கேட்டுள்ளார்.

இது தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் கருத்து வெளியிடுகையில் -

இப்போதைய நெருக்கடி நிலைக்குத் தீர்வுகாண்பதற்கு தேர்தல் ஒன்றுக்குச் செல்வது சரியான முடிவு அல்ல.

ஜனாதிபதியும், பிரதமரும் ஒருவரையொருவர் தாழ்த்தி விடுவதிலேயே குறியாக இருப்பதாகக் கருகிறேன். இது அரசியலில் விளையாடுவதற்கான தருணம் அல்ல.

பாதுகாப்பு அமைச்சை தன்வசம் வைத்திருப்பவர் என்ற வகையில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது ஜனாதிபதி சந்திரிகாவின் கடமையாகும். இந்த நெருக்கடியில் தேர்தல் ஒன்றுக்கு நாடு தள்ளப்பட்டால், 600 கோடி ரூபா செலவாகும். இது ஒரு தேவையற்ற செலவாகும். அத்துடன் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தேர்தல் தீர்வுகளைத் ரப்போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசியல் கண்ணோட்டம் - எஸ்.எம்.ஜி

# இனப்பிரச்சினைக்கான தீர்வும், சமாதானப் பேச்சுவார்த்தையும் கல்யாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்த கதைகளாகிவிட்டன...

'கல்யாணச் சந்தடியில் தாலி கட்ட மறந்தானாம்'' என்பது தமிழிலுள்ள நாட்டுப்புற பழமொழிகளில் ஒன்று.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வருவதாகக்கூறப்படும், சமாதான முயற்சிகள் இந்த நாட்டுப்புற பழிமொழிகளைத் தான் நினைவூட்டுகின்றன.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டுவரும் பேச்சுவார்த்தை முயற்சிகளை இந்தியா உன்னிப்பாகக் கவனித்துவருகிறது.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் நலனைப் புறக்கணித்து, எந்த முடிவும் மேற்கொள்ளவும் முடியாது.

இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சு விபரங்கள் உடனுக்குடன், இந்தியாவுக்குத் தெரியப்படுத்தப்பட்டுவருகின்றன.

இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக - அமெரிக்காவும் அக்கறையுடன் கவனப்படுத்திவருகின்றது. இவை கடந்த சில வருடங்களாக வெளிவந்துகொண்டிருக்கும் செய்திகள்.

அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் போவதால், இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது, நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படும் சந்தர்ப்பம் கிட்டாது.

இதைச் சம்பந்தப்பட்டவர்கள் தற்போது விளங்கிக்கொள்வர்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணவேண்டுமென்ற எண்ணம், சிங்களத் தலைவர்களுக்கு இருக்குமானால், இனப்பிரச்சினைக்கு எப்போதோ தீர்வு கண்டிருக்க முடியும். நாட்டில் அமைதியை ஏற்படுத்தியிருக்க முடியும்.

இலங்கை - சிங்கள பௌத்த தேசம். இங்கு சிங்கள பௌத்தர்கள்தான் எல்லாம் அவர்களுக்கே இங்கு சகல உரிமைகளும் உண்டு. சிங்கள பௌத்தத்துக்குப் பின்னரே, மற்றதையெல்லாம் யோசிக்கலாம் என்ற ஒரே சிந்தனையுடன் செயற்படும் தலைமைகள் எப்படி நாட்டில் இனப்பிரச்சினைக்கு, ஒரு சுமூகமான, நிரந்தரமான தீர்வைக்காணமுடியும்.

இந்தியா தனது நலனில் அக்கறை கொண்டிருப்பதில் தவறில்லை. ஆனால், அயல் நாடொன்றில், பூர்வீகக் குடிகளாக ஒரு இனம், நாடு விடுதலைபெற்ற நாளிலிருந்து, அடக்கி ஒடுக்கப்பட்டு ஆளத்தொடங்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், தலையிட்டுத் தட்டிக்கேட்க முன்வராத இந்தியா - அந்த மக்கள், தம்மையும், தமது மொழியையும், தமது தாயகத்தையும் பாதுகாப்பதற்கு வேறு வழி இன்றி, ஆயுதம் ஏந்திப்போராடி, விடுதலையை நெருங்கிக்கொண்டிருக்கும்போது, 'தனது நலன்' என்றுகூறி, அடக்குமுறைகளுக்கு உதவியாகவும், ஒத்துழைப்பாகவும் இருக்க முனைவதை எப்படிச் சொல்வது?

தமிழினத்தை அழித்து ஒழிக்க முனைந்தவர்கள் அந்த இனம் - வேறொருவரின் உதவியுமில்லாமலே தம்மைத் தாமே காத்துக்கொள்வதற்கும், தமது மக்கள் விடுதலை பெற்றுச் சுதந்திரமாக வாழ்வதற்கும், தமது உயிரைத் துச்சமாக மதித்து, பலிகொடுத்து, வெற்றியைநோக்கி நெருங்கும் சமயம் பிராந்திய வல்லரசான இந்தியா, இனத்தை அழிக்க முனைந்தவர்களுக்கு உதவமுன்வரலாமா?

இந்தியா தனது பாதுகாப்பைப் பற்றி யோசிப்பதற்கு முன்னரே, இலங்கையில் ஆட்சி அதிகாரத்திலிருப்பவர்கள் இந்தியாவின் பாதுகாப்புப் பற்றிக் கவலைப்படும்போது, எதற்காக இவர்கள் இவ்வாறான அக்கறை கொள்கிறார் என்று இந்தியா யோசிக்கவேண்டாமா?

இலங்கை ஜனாதிபதியும், அவரது சகாக்களும் இந்தியாவுக்கு ஓடோடிச் செல்கிறார்கள். புலிகளின் - கடற்புலிகளினால், இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து என்கிறார்கள்.

தமிழீழம் கிடைத்தால், இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு அபாயம் என, இங்கிருந்து போய் இந்தியாவுக்கு ஆலோசனை கூறுகிறார்கள்.

கடற்புலிகளை அழிக்கவேண்டும். விடுதலைப் புலிகளின் திட்டங்களுக்கும், யோசனைகளுக்கும் இடம் கொடுக்கக்கூடாது. திருகோணமலையை விடுதலைப் புலிகள் தாக்கும் நிலையிலுள்ளனர். திருகோணமலையைப் புலிகள் பிடித்தால், பலாலிக்குப் பாதுகாப்பு இல்லாமற்போய்விடும். இதனால், இந்தியாவின் பாதுகாப்பிற்கே ஆபத்தாகிவிடும் என்கிறார்கள்.

இலங்கையின் - சிங்கள ஏகாதிபத்தியம் இதனைத்தான் இந்தியாவிடம்போய், 'இனப்பிரச்சினை தீர்வு' என்று பேசுகிறது. இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென்று முனைகிறது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதுபற்றியோ, சமாதான முயற்சிகளை மேற்கொள்வதுபற்றியோ, இலங்கை ஜனாதிபதி தரப்பும்சரி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தரப்பும்சரி முயற்சி மேற்கொள்ளவில்லை.

விடுதலைப் புலிகளை எப்படி அழிக்கலாம், புலிகளை அழித்தால், தமிழினத்தையும், ஈழத்தையும் அழித்துவிடலாம் என்பதே இவர்களின் நோக்கமாகும்.

விடுதலைப் புலிகளைச் சர்வதேச பயங்கரவாத இயக்கத்தோடு தொடர்புபடுத்தி, அமெரிகாவின் சர்வதேச பயங்கரவாத ஒழிப்புத் திட்டத்துடன் சேர்த்து, அழிப்பதற்கு சிங்கள பேரினவாதிகளும், பேரினவாத ஆட்சிகளும் முயற்சியை மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகள் போரில் மட்டுமல்ல, இராஜதந்திரத்திலும், வீரர்கள் என்பதால், அவர்கள் சர்வதேச பயங்கரவாத வலைக்குள் சிக்கவைக்கும் சூழ்ச்சியிலிருந்து, தம்மைப் பாதுகாத்துக்கொண்டனர்.

சமாதானத் தீர்வு என்ற நோக்கில், சர்வதேச சமூகத்தின் உதவியைப் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதென்ற போர்வையில் - சர்வதேச வலைக்குள் விடுதலைப் புலிகளைச் சிக்கவைக்கும் முயற்சிகளிலும், விடுதலைப் புலிகள் தப்பிக்கொண்டனர்.

சிங்களப் பேரினவாதிகள் 'தமக்கு மூக்குப் போனாலும், எதிரிக்குச் சகுனப்பிழையானால் போதும்' என்ற நிலையில் தமிழர்கள் தங்கள் தாயகத்தில் சுதந்திரமாக வாழமுனைந்தால், அவர்களின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியாது என்பதை உணர்ந்து, இந்தியா - இலங்கையில் நுழைந்து, தனது கட்டுப்பாட்டுக்குள் தமிழர் தாயகத்தைக் கொண்டுவந்தாலும் பரவாயில்லை என்ற நிலைப்பாட்டுக்கு வந்துவிட்டதாகத் தோன்றுகின்றது.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலோ, நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதிலோ சிங்களத் தலைமைக்கு அக்கறை இல்லை.

இதனால், இந்தியா தனது பிராந்திய அதிகார நலனைப் பாதுகாக்கும். அமெரிக்கா தனது உலக ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு இலங்கையையும் பயன்படுத்தமுனையும்.

சிக்கிம் நாடு - இந்தியாவின் ஒரு மாநிலமானதுபோல, இலங்கையையும் இந்தியா ஒரு மாநிலமாக்க முயற்சிக்கிறது. அதற்குமுன் பூட்டான் நாட்டின் பாதுகாப்பு, வெளிவிவகாரம் இநதியாவிடம் இருப்பதுபோல, இலங்கையின் பாதுகாப்பையும், வெளிவிவகாரங்களையும் இந்தியா மேற்கொள்வதற்கு, சிங்களத் தலைமைகள் வெற்றிலை வைத்து, அழைத்துக்கொண்டிருக்கின்றது.

எதிர்காலத்தில் இந்தியாவிடமிருந்து, விடுதலைபெறுவதற்காகத் தமிழ்மக்களின் உதவியை சிங்களவர்கள் நாடவேண்டியும் ஏற்படலாம். அதுவரை தமிழர் தாயகமும், இலங்கையும் உருப்படியாக இருக்குமானால்,

இப்பொழுது, இனப்பிரச்சினைத் தீர்வு, சமாதானப் பேச்சு என்று சொல்வதெல்லால வெறும் பம்மாத்து, போலிநாடகம். கல்யாணச் சந்தடியில், தாலிகட்டி மறந்த கதையாக இனப்பிரச்சினையும், சமாதான் பேச்சும் மறக்கப்பட்டவைகளாகிவிட்டன.


## கலையரங்கு - செல்வா



# சமகால வாழ்வை உள்வாங்கிய ஓவிய சிற்பக் கண்காட்சி

திருமறைக் கலாமன்றம் சார்பில், ஓவியக் கலைவட்டம் நடாத்தும் ஓவிய, சிற்பக்கண்காட்சிக்காக யாழ். நக்கா வீதியில் அமைக்கப்பட்ட அரங்கு, விழாக்கோலம் பூண்டு காணப்படுகின்றது. உள்ளே சென்றேன் வெற்றிடங்கள் இல்லாமல் நிறையக் கேள்விகளையும், விடைகளையும் உள்வாங்குவதற்காக.

கண்ணுக்குத் தென்படும் முதல் ஓவியமே பெண்ணைப் பற்றியதாக இருந்தது. பெண் சமூகம் பற்றியதாக இருந்தது. அது ஆடை இருந்தும், அரை குறையாக அவிழ்ந்த நிலையில் 'T.றெகெண்சியா' உதிர்த்த முதல்ஓவியமாகும். தலையைக் குனிந்து செல்ல வைப்



பதா? அல்லது எதுவானாலும் பெண்களை அறிய வாய்ப்பிருக்கிறது என்பதை உள்ளே சென்று பார்க்கும்போது, தெரிந்துவிடும். எல்லாவற்றையும் பார்த்து முடித்ததும், பலவற்றை இணைப்பாளரான அ.யூட்சனிடம் கேட்டறிந்து கொண்டோம். விடைபெற்றுவரும்போது, கடைசியாக ஒரு ஓவியம் - மேரி டியூலா வரைந்தது. அதாவது பட்ட மரத்தில் ஏறி நிற்கும் கிழவன், உறுதியாக நிற்கின்றான். இரண்டும் நம்பிக்கையை வெளிக்காட்டிவிட்டது.

பலதரப்பட்ட சமூகக் கருத்துக்களை மையமாகக் கொண்டிருந்தபோதும், இடப்பெயர்வும், அவலமும் அதற்குள் திமிரேற்றி இருக்கின்றன. ஓட்டைப்பானையில் தண்ணீராய் வடிந்த வாழ்க்கையும், ஊரை-மெல்ல மெல்லக் குடித்த நிலையும், உருவகத்தில் பல வகைப் பொருட்களிலும், நிறங்களிலும் சூழ வைக்க எல்லாப் பக்கமும் ஓவியமாகவும், உயிராகவும் காணப்பட்டது. பேசாதே செய்து காட்டு என்று சொல்வார்கள். கருத்துக்களும் அதன் விளைவுகளும் என்ன செய்யமுடியும்?

யாழ்.மண்ணிலே அரங்கேறிய நிகழ்வுகள் பட்டினிவாழ்வு, சாவு தலைகுனிந்து, நிமிர்ந்து இதற்குள் மட்டும் எப்படிப் போவதென்று, கண்ணைக் கசக்கிவிட்டு, விழித்துப் பார்த்தேன். ஈடுசெய்யமுடியாமலும், பொருளாதார வசதி



இல்லாமலும், மங்கிப்போன பல கருத்துக்களையும் வெளிக்காட்டி, கடைசிவரையும் நிற்கின்றது.

எண்ணெய் வர்ணங்கள், நீர் வர்ணங்கள் பலவகையில் படிந்துகொள்ள, வெள்ளைத் தாளில் நிறச்சோக்குக்களும் அழகூட்ட பொருளாகவும், இதற்கு மூல காரணமாகவும் அழகுபடுத்தி நிற்கின்றது.

யாழ்.பல்கலைக்கழக மற்றும் இராமநாதன் நுண்கலைப்பீட - சித்திரமும் வடிவமைப்பும் துறையைச் சேர்ந்த மாணவர்களின் படைப்புக்கள் கூடுதலாகவும், பல பாடசாலை களிலும் உயர்தர வகுப்பில் கல்விகற்கும் மாணவர்களின் படைப்புக்கள், குறைவாகவும் சேர்ந்து கொள்ள நிறைந்த மண்டபம் அழகாக



ஒன்றன்பின் ஒன்றாகத் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிரச்சினைகளில் கிடைக்கப்பெற்ற, விளைவுகளையும் உள்வாங்கி இருக்க, நடைபாதையில் குற்றிய முள்போல், ஒவ்வொருவருக்கும ஏதோவொரு பக்கத்தில் சிவந்திருக்கும்.



இதற்காக 261 நிறங்கள் சேர்க்கப்பட்டுள்ளது. ஆழமான எமது கருத்துக்களும் இதனுள் நிழலாட வைக்கின்றது. இதன் கலை வட்டத்துக்கு, ஆலோசகராக ஓவியர் 'ரமணி, இராசையா, அம்பலவாணர்' போன்றோர் இருந்து வருகிறார்கள். வளர்ச்சிக்குத் துணையாகவும் எங்களைப் பார்க்கக் காத்திருக்கும், சிலவற்றில் நூறினைத் தெரிவுசெய்து, கொழும்பு-7 இலுள்ள 'ஜோர்ச் கீற் ஓவியர்களாகவும்' எனும் கலைச் சந்தையில் வைக்கப்படவுள்ளது.

யாழ்.நகரம், மக்கள், சூழல், சமூகம், யுத்த விளைவுகள்போன்ற, கருத்துக்களைப் பிரதிபலிப்பதாகச் செய்யப்பட்ட ஓவியங்களும், சிற்பங்களும் அடங்கும் கலைவட்டமானது - வாரத்தில் முதல் நாளும், மூன்றாவது நாளும் பயிற்சிப் பட்டறைகளை நடத்திவருவதாகத் தெரியவருகிறது.

சிறப்பாக மெழுகு, சிமெந்து கொண்டு, பல



அழகுப் பொருட்களில் குடை பிடித்து நிழல் பரப்புகின்றன. இங்கே கிளைகள் நிமிர்ந்து, வளைந்து, சரிந்த, இலை உதிர்ந்த மரக் கொப்புக்கள் பல சிற்பங்களாக செதுக்கப்பட்டு வர்ணம் தீட்டி மேசையில் வரிசைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன.

# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது துப்பாக்கிச்சூடு; 5 பொதுமக்கள் பலி!

## ஈராக்கின் தென்பகுதி நகரான அமராவில் சம்பவம்



(பக்தாத்)

ஈராக்கின் தென்பகுதி நகரான "அமரா" வில் ஆர்பாட்டக்காரர்களுக்கும் பிரிட்டிஷ் படையினருக்குமிடையே நடைபெற்ற மோதலில் 5 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

தமக்கு வேலைவாய்ப்புக்கள் அருகிவருவதாகவும் அண்மையில் தமது பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுநருக்கெதிராகவுமே பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் ஒருவர் பிரிட்டிஷ் படையினர்மீது கிரனேட் தாக்குதல் மேற்கொள்ள முயன்றபோது சுட்டுக் கொல்லப்பட்டதாக பிரிட்டிஷ் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களையும் வெடி பொருட்களையும் வீசியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை ஈராக்கிலுள்ள பிரிட்டிஷ் படையினர் நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவம் நடைபெறுவதற்கு முன், ஈராக்கிய பொலிஸார் இருவரின் குடும்பப் பிணக்கை அமெரிக்கப் படையினர் தீர்த்துவைக்க முற்பட்டபோது நடைபெற்ற மோதலில் இரு பொலிஸாரும் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

# ஆப்கானில் இருவேறு மோதல்களில் ஒன்பது பேர் வரை உயிரிழந்தனர்!




(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தென்பகுதியில் இரு தீவிரவாதச் சம்பவங்களில் 9 பேர்வரை கொல்லப்பட்டனர். கந்தகார் மாகாணத்தின் கிராமப் பகுதியில் போதைப்பொருள் கடத்துபவர்களுக்கும் படையினருக்குமிடையே நடைபெற்ற மோதலில் 5 படையினர் கொல்லப்பட்டும் மூவர் காயமடைந்துமுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

"கெல்மன்ட்" மாகாணத்தில் படையினர் வழமையாகப் பயன்படுத்தும் பாதையில் நிலக்கண்ணி வெடிகளைப் புதைக்க முற்பட்ட வேளையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 4 சந்தேகத்துக்கு கிடமான தலிபான் போராளிகள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல்களால ஆப்கானிஸ்தான் புனர்நிர்மாணப் பணிகள தடைப்படப்போவதில்லை என ஜனாதிபதி ஹமிட் ஹர்சாய் தெரிவித்தார்.




# இன்ரநெற் பயன்படுத்துவதற்கு கியூபாவில் நிபந்தனை விதிப்பு!




AP

கியூபாவில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சட்டத்தின் மூலம் இன்ரநெற் வசதிகளைப் பெறுவதற்கு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது.

வைத்தியர்கள், அரசாங்கக் கட்சி அங்கத்தவர்கள், அரசாங்க ஊழியர்கள் மாத்திரம் பொதுவான தொலைபேசியுடன் இன்ரநெற் வசதிகளைக் கோரமுடியும்.

கியூபாவின் அரசதொலைபேசிக் கம்பனியான "ரெக்ஸா", தவறான முறையில் இன்ரநெற் வசதிகளைப்பெற எத்தனிப்பவர்களை தடைசெய்வதற்கு சட்டத்தின் மூலம் அதிகாரம் பெற்றுள்ளது.

வீட்டில் இருந்தவாறு இன்ரநெற் ஊடாக தகவல்கள் பெற்றுக்கொள்பவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே சட்ட விரோதமாக இன்ரநெற் மூலம் தகவல்களைப் பெறுபவர்கள் இந்தத் திட்டத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் வெளிநாட்டுச் செய்திகள் தகவல்களைப் பெறுபவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது சர்வதேச தகவல்களை பெறுவதற்கு ஆடம்பர உல்லாசப் பிரயாண விடுதிகளில் மாத்திரமே இன்ரநெற் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

கியூபாவில் உல்லாசப் பிரயாணிகளுக்கான வீட்டுவசதிகள் இன்ரநெற் மூலமே செயற்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

## தென்னாபிரிக்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தார்

தென்னாபிரிக்க ஜனாதிபதி "தெபே மைபெகி" ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தேர்தல பிரசாரத்தை ஆரம்பித்துள்ளார்.

ஜனாதிபதி 'தெபேமைபெகி கடந்த சனிக்கிழமை நடத்திய ஆரம்ப உரையில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டிருந்தார்.

வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும் கறுப்பின பெரும்பான்மை மக்களுக்கு கூடுதலான அதிகாரங்களை வழங்குவதற்கு தான் திட்டமிட்டுள்ளதாகவும்,

நிலமற்ற மக்களுக்கு தோட்ட நிலங்களை வழங்குவதற்கேற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஒளிபரப்பில் ஜனாதிபதி நேரில் தோன்றி, கட்சியின் தலைவர் என்ற நிலையில் உரையாற்றுவதற்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மன்டேலா பதவிக்கு வந்த பின்னர் நடைபெற ஏற்பாடாகியுள்ள தேர்தலுக்கான நாள் குறிப்பிடப்படவில்லை எனவும் எதிர்க்கட்சியினர் தெரிவித்தனா.

# ஸ்பிறிட் விண்கலத்தின் ஆறு சில்லுகளும் செவ்வாயின் தரையுடன் நிறுத்தப்பட்டன!

## நாஸா விஞ்ஞானிகள் அறிவிப்பு

(வொஷிங்ரன்)

செவ்வாய்க்கு அனுப்பப்பட்ட "ஸ்பிரிட்" விண்கலம் தரையில் நகர்ந்து ஆய்வுகளை மேற்கொள்வதற்கேற்றவாறு அதன் 6 சில்லுகளும் செவ்வாயின் தரையுடன் நிறுத்தப்பட்டுள்ளதாக நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், செவ்வாய்க் கிரகத்தின் தரையில் கலம் இறங்கும்போது ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதற்காக உபயோகித்த காற்றடைத்த பைகள் அது முன்னேறும் பாதையில் தடை செய்யலாம் எனவும் கருதப்பட்டுள்ளது.

இதனால் ஸ்பிரிட்டை 120 பாகையூடாக திசைதிருப்பி புதிய திசையில் நகர வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்பிரிட் ஆய்வுக் கலத்தின் 6 சில்லுகளும் செவ்வாய்க் கிரகத்தை அடையும்வரை மடித்து வைக்கப்பட்டிருந்ததாகவும் தற்போது அவை நிலத்துடன் உறுதியாக நிற்பதாகவும் இதுவே கடைசியாக கிடைத்த வெற்றி எனவும் தெரிவிக்கப்பட்டது.

சில்லுகளை நிலைநிறுத்துவதே தமது பாரிய பிரச்சனையாக இருந்ததாக நாஸாவின் தொழில்நுட்ப வல்லுநர் கிரிஷ்வூர்கீ தெரிவித்தார்.

தற்போது விண்கலத்தின் திசையை மாற்ற முயற்சித்தாலும் நீர், உயிரினம் தொடர்பான செயற்பாடுகள் தொடரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ரோவர் விண்கலத்தை எல்லாப் பக்கங்களுக்கும் திருப்புவதன் மூலம் முழுமையான வர்ணப்படங்களைப் பெறுவதற்கும் நாஸா விஞ்ஞானிகள் தீர்மானிததுள்ளனர்.

## ஊர்சுற்றி எழுதுவது

இந்தியப் பத்திரிகையாளர்கள் பலரை இலங்கைக்கு அழைத்துவந்து தமிழ் மக்களின் உண்மைநிலைகளை அறிந்து கொள்ளச்செய்வதற்கு முயற்சி செய்யப்போவதாக அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார். இந்த முயற்சியில் அவர் உண்மையிலேயே ஈடுபடவும் கூடும்.

இங்குள்ள தமிழ் மக்களின் நிலைமையை இந்தியப் பத்திரிகையாளர்கள் இங்கு நேரில் வந்து பார்த்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டுமா? வந்துபார்த்ததும் அவர்கள் புரிந்துகொள்வார்களா?

இந்தியாவிலிருந்து வந்தவர்கள் குறிப்பாக தமிழ் நாட்டவர்கள் பத்திரிகையாளர்களானாலும், இலக்கியவாதிகளானாலும், ஏன் அரசியல்வாதிகளானாலும் கூட இலங்கையிலுள்ள தமிழர்கள் நிலை பற்றி மட்டுமல்ல இலங்கையின் அரசியல் நிலை பற்றிக்கூட புரிந்துகொள்ளவோ, தெரிந்துகொள்ளவோ அக்கறை கொள்ளவதில்லை.

தமிழ்நாட்டில் ஒரு சில அரசியல் தலைவர்கள்தான் இங்குள்ள தமிழ் மக்களின் நிலையையும், உரிமைப் போராட்டங்களையும் அரசியல் வரலாற்றையும் அறிந்து வைத்திருக்கிறார்கள். இவர்கள் தான் இங்கு மக்களுக்கு நெருக்கடி ஏற்படும் சமயங்களில் அங்கு குரல்கொடுப்பார்கள், கொடுக்கிறார்கள்.

இவர்களை அங்குள்ள இந்து தேசியவாதிகள் வேறுவிதமாக முத்திரைகுத்தி பயமுறுத்திவிடுகிறார்கள்.

தமிழ்நாட்டில் பண்ருட்டி இராமச்சந்திரன் போன்ற அரசியல்வாதிகளுக்கு இலங்கைத் தமிழர்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் அனைத்தும் நன்குதெரியும். முன்பு தமிழ்ப் போராளிக்குழுக்களுடன், குழுத் தலைவர்களுடன் இவர் நெருங்கிய தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தைகளும் நடத்தியிருக்கிறார். முக்கிய பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டிருக்கிறார்.

இலங்கையின் இனப்பிரச்சினை சம்பந்தமாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பற்றியோ, இப்பொழுது இந்த முயற்சிகள் தடைப்பட்டு நிற்பது பற்றியோ பண்ருட்டி இராமச்சந்திரன் வாயே திறப்பதில்லை. இப்பொழுது மட்டுமல்ல இதற்கு முன்னரும் தமிழ்மக்களுக்கு நெருக்கடி ஏற்பட்ட போதும் கூட அவரால் வாய்திறந்து எதுவும் சொல்ல முடியவில்லை.

பண்ருட்டி இராமச்சந்திரன் மட்டுமல்ல அவரைப்போன்ற இலங்கை விவகாரம் பற்றி நன்கு தெரிந்தவர்களும் கூட வாய்திறந்து தங்கள் கருத்தை சொல்வதற்கு முன்வருவதில்லை.

இந்திராகாந்தி இந்தியாவின் பிரதமமந்திரியாக இருந்தபோது இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக ஜே.ஆர் ஜெயவர்த்தனவுடன் ஆலோசனை நடத்துவதற்காக இந்திராவால் அனுப்பப்பட்டவர். இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி இவர் நன்கறிந்தவர்.

ஆனால் இந்தியப் பிரதமர் மாறும்போதும் அரசியல் நிலையில் மாற்றம் ஏற்பட்டாலும் அதிகார வர்க்கத்தின் நிலைப்பாட்டின் படிதான் அவர் செயற்படுவார். அவர் தமது கருத்தைச்சொல்லமாட்டார். அதிகாரவர்க்கத்தின் கட்டுப்பாட்டை அவரால் மீறமுடியாது

இன்று பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இலங்கைத் தமிழ் மக்களுக்காக தடயுைத்தரவையும் மீறி தமது இல்லத்திலேயே கூட்டம் நடத்தியவர்.

இன்று இலங்கைத் தமிழர் நிலைமை பற்றி ஏதாவது பேசுகிறாரா? பேசினால் இலங்கை ஆட்சியாளர்களுக்கு சாதகமாகத்தானே ஏதாவது சொல்கிறார்.

இலங்கை இனப்பிரச்சினையில் பேச்சுவார்த்தை என்று முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது இந்து பத்திரிகையின் ஆசிரியர் என்றாலும் சம்பந்தப்பட்டிருக்கிறார்.

இந்து எப்போதாவது இலங்கைத் தமிழ் மக்களுக்காக குரல்கொடுத்திருக்கிறதா?

இந்து ராமுவுக்கு இலங்கை பற்றி தமிழ் மக்களின் நிலைபற்றித் தெரியாதா? அங்குள்ள பத்திரிகையாளர்களுக்கு இலங்கையில் தமிழ்மக்களினதும் தமிழர் தாயகத்தினதும் நிலைமை தெரியாதா? இந்திய ராணுவம் இருந்தபோது எத்தனை பத்திரிகையாளர்கள் வந்துபோனார்கள் தெரியுமா?

இந்தியாவின் முக்கிய பத்திரிகைகளின் நிருபர்கள் கொழும்பில் தங்கியிருக்கிறார்கள். இவர்கள் வன்னிக்கும் வடகிழக்கிற்கும் அடிக்கடி போய்வருகிறார்கள். இவர்கள் இங்குள்ள நிலைமை பற்றி பத்திரிகையின் தலைமைப் பீடத்துக்கு தெரிவிக்காமலா இருக்கிறார்கள்?

தூங்குகிறவர்களை எழுப்பலாம் தூங்குகிறவர்கள்போல பாசாங்கு செய்பவர்களை எழுப்பமுடியாது என்று சொல்கிறார் அன்பர்.

சரிசரி இந்தியப் பத்திரிகையாளர்களை அமைச்சர் சுற்றுலாவுக்கு அழைத்துவந்து காட்டட்டும் .நமது மன உறுதியையாவது நேரில் பார்த்துக்கொள்ளட்டும் என்கிறார் எதிர்வீட்டுக்காரர்...

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

# பிரபாகரனின் உத்தரவின் பேரிலேயே காங்கிரஸ் - தி.மு.க கூட்டணியாம்!

## சுப்பிரமணிய சுவாமி கூறுகிறார்

நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி. மு.கவுக்கு ஆதரவாக செயற்பட போவதாகவும் காங்கிரஸ் தி.மு.க கூட்டணி விடுதலைப்புலிகளின் உத்தரவுப்படி அமைந்திருப்பதாகவும் ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணியம் சுவாமி குற்றஞ்சாட்டியுள்ளார்.

சென்னையில் ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணிய சுவாமி, நேற்று நிருபர்களைச் சந்தித்துக் கூறியதாவது:

தி.மு.க - காங்கிரஸ் - ம.தி.மு.க கூட்டணி ஒரு தீவிரவாத கூட்டணியாகவும் புலிகளுக்கு ஒரு வசதியான கூட்டணியாகவும் செயற்படுவது என்பது உறுதி. ஏனெனில் இந்தக் கூட்டணி விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் உத்தரவின் பேரிலேயே உருவாகியுள்ளது.

காங்கிரஸ் இம்மாதிரியான கூட்டணியில் சேருவதில் ஆச்சரியமில்லை. நான் எட்டுமாதங்களுக்கு முன்பே இக்கூட்டணி உருவாகும் எனக் கூறியிருந்தேன். சோனியாவின் தாயாரும் குவாத்ரோச்சியும் புராதன கலைப் பொருட்களை கடத்துதல் மற்றும் சட்டவிரோத சர்வதேச பணபுரட்டல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள் என்ற காரணத்தால் தான் நான் அவ்வாறு கூறியிருந்தேன்.

மேலும் சோனியா - புலிகள், ராஜீவ் காந்தியை படுகொலைசெய்ய ஊக்கமளித்தார். இந்த விடயத்தில் அவருடைய செய்கைகள் கிருமினல் சட்டத்தின் கீழ் அவர் மீது நடவடிக்கை எடுக்க போதுமான அளவிற்கு சந்தர்ப்ப சாட்சிகள் உள்ளன. அதனால்தான் அவர் பிரபாகரன் இந்தியாவிற்கு கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கையை வைப்பதேயில்லை.

நாடாளுமன்ற தேர்தலில் மதுரை தொகுதியில் போட்டியிட உள்ளேன். ஜனதா கட்சி போட்டியிடும் தொகுதிகளை விடுத்து மற்ற தொகுதிகளில் அ.தி.மு.க வுக்கு ஆதரவாக செயற்படுவோம்.

அ.தி.மு.கவோடு பேச்சுவார்த்தை நடத்திவிட்டு ஆதரவு தெரிவிக்கவில்லை. ஜனதா கட்சியே முன் வந்து தான் ஆதரவு தெரிவிக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசின் வற் வரி அதிகரிப்பால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்பு

## மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

அரசாங்கம் வரவு - செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தி நடைமுறைக்கு வந்திருக்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மூலம் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதாக எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இப்போது புதிதாக நடைமுறைக்கு வந்திருக்கும் வற் வரி மூலம், அனைத்துப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. அரசாங்கம் வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் ஆடம்ப பொருட்களுக்கன வற் வரியை 20 வீதத்திலிருந்து 15 வீதமாகக் குறைத்துள்ளது.

ஆனால் அத்தியாவசிய பொருட்களுக்கான வற் வரி 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு சுமை ஏற்படுத்தக் கூடியளவிற்கு வரி விதிப்பு இடம்பெறவில்லை என்று அரசாங்கம் கூறினாலும் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜயபக்ஷ குற்றம்சாட்டினார்.

The Leading Daily of Tamils' Homeland




"பொங்கலுக்கு இன்னும் மூன்று நாள் தான் இருக்கு மணியம்... நீ... எல்லா ஏற்பாடுகளையும் செய்திட்டாயே...!"

"என்ன பெரிய ஏற்பாடு கனகு... வழமைபோலத்தானே ஒரு பொங்கலைக் கொண்டாடப் போறம்... இதிலென்ன விசேடமிருக்கு..."

"இடம்பெயர்ந்து வன்னியிலை ஆராரோ வீட்டு வளவுகளில் குடியிருந்து அலைஞ்சுலைஞ்சு ஏழு வருசத்துக்குப் பிறகு ஊருக்கு வந்து உறவுகளோடை சேர்ந்திருக்கிறாய்... கொஞ்சம் உற்சாகமாய் பொங்கலை கொண்டாடினாத்தான் என்ன...?"

"ஊருக்குத்தான் வந்திட்டம் ஆனா எங்கட வீட்டுக்கு... எங்கட காணிக்குப் போட்டமே... இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்துக்குள்ள தானே என்ரை பரம்பரை முதுசக் காணி இருக்கு... வீட்டைத்தான் கண்டறியாத படை இடிச்சுத் தள்ளிட்டுது... காணியில போய் கொட்டில் போட்டுக்கொண்டு இருக்கலாம் என்றாலும் விடுறாங்கள் இல்லையே..."

"நீ சொல்லுறதும் சரிதான்... சொந்தக் காணியில... அது கலட்டித் தறையாக இருந்தாலும் சரி... சொந்த வீட்டிலை... அது கொட்டிலாய் இருந்தாலும் சரி... அந்த முற்றத்தில பொங்கிப் படைச்சுச் சாப்பிடுற சந்தோசம் வராதுதான்... என்ன செய்யிறது எங்கடை தலைவிதி அப்படியாய்ப் போச்சு... மணியம்...."

"முதல்லை தமிழன் பொங்கி எழுந்தான்... பிறகு தமிழ் பொங்கு தமிழாய்ப் பொங்கிப் பிரவகித்தது... இனித் தமிழ் மண் பொங்கிச் சிலிர்க்கவேணும்... அதற்குப் பிறகுதான் பொங்கல் பொங்கலாக இருக்கும் கனகு...."

"நல்லாய்ச் சொன்னாய் மணியம்... உன்ரை மனசுக்குள்ளை எவ்வளவு உணர்ச்சியும்... வேதனையும் ... பொங்கிக் குமுறிக்கொண்டு இருக்கென்று தெரியுது... நான் வாறன்..."

தெருவிளக்கு

# புத்த மதத்தை...

படுத்தப்பட்டிருக்கும் புதிய திட்டத்தின்படி பிக்குகளுக்கு ஆங்கிலப் பாடம் கற்பிக்கப்படும்.

நோர்வே அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் அந்த திட்டத்தின் பிரதான நோக்கமே புத்த மதத்தை அழிப்பதுதான்.

மதமாற்ற தடைச் சட்டம் தொடர்பாக ஆராய புத்தசாதன அமைச்சர் வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலினால் பெரும் பயனேதும் ஏற்படப்போவதில்லை.

அமைச்சர் நியமித்துள்ள 31 பிக்குகளைக் கொண்ட சபை ஒரு பெயர்ப்பட்டியலாக மட்டுமே இருக்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

# கலைப்பணி...

நியர்களை எதிர்க்கவேண்டுமென்றும், ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராடவேண்டும் என்ற எண்ணப்பாட்டையும் தோற்றுவித்தன. இதன் பரிணாம வளர்ச்சியே இன்று ஒரு பெரும் விடுதலை அமைப்பை என்னால் உருவாக்க முடிந்தது எனக குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், இன்று எமது விடுதலைப் போராட்டத்தில் பல அர்ப்பணிப்புகளும், அளப்பரிய தியாகங்களும் இடம்பெற்றுள்ளன. இந்த உண்மையான வரலாற்றுப் பதிவுகளையெல்லாம் உணர்வுபூர்வமாக கலைப்படைப்பாக எல்லோருக்கும் சொல்லக்கூடிய ஆற்றல் கலைஞர்களுக்கே உண்டு. நீங்கள் அனைவரும் தொடர்ந்தும் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

தேசியத் தலைவரால் கௌரவிக்கப்பட்ட கலைஞர்கள் யுத்த காலத்திலும், பல நெருக்கடியான காலத்திலும பல வருடங்களாக தாயக நேசிப்போடு கலைப்பணியாற்றி வருபவர்களென்பது குறிப்பிடத்தக்கது.

## புலிகளுடன்...

சகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அறிவித்ததையடுத்தே சிறிலங்கா சுதந்திரக்கட்சி புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கான முயற்சிகளில் இறங்கியிருப்பதாகவும் சுதந்திரக் கட்சி வட்டாரங்களை ஆதாரங்காட்டி செய்திகள் மேலும் தெரிவித்தன.

## சமாதானத்தில்....

சிலவருடகாலம் இடம்பெற்ற யுத்த அழிவுகளிலிருந்து இந்த நாட்டைப் பாதுகாத்து புதிய அரசியல் தீர்வு ஒன்றிற்குச் செல்வதே எனது நோக்கமாகும்.

நாட்டின் பொருளாதாரம் கடந்த ஆட்சியை விட 5.6 வீதத்தால் அதிகரித்துள்ள நிலையில் விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகத் திட்டம் முன்வைக்கப்பட்டது. தமது அரசாங்கத்தின் சமாதான வேலைத் திட்டத்தில் தான் சமாதான கால கட்டத்தில் முக்கியமான மூன்று அமைச்சுக்களின் பொறுப்புக்கள் தம்மிடம் இருந்து கைநழுவிப்போன்தால் சமாதான நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதில் நெருக்கடி நிலைக்கு உள்ளாகியிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

## சுதந்திரக் கட்சி...

மாகாண சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களுக்கான கூட்டம் அடுத்த வாரம் இடம்பெறும் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல் ஒரே தினத்தில் நடத்துவதென கடந்த வாரம் ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்திருந்தார்.

இதையடுத்தே மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வது குறித்து கட்சி அங்கத்தவர்கள், நடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்தை அறியவே இந்த சந்திப்பு நடத்திவருகிறார் என்பது குறிப்படத்தக்கது.

# இராணுவ வாகன...

மேலும் இருவருடன் இந்த நபர் மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் அமர்ந்துசென்று கொண்டிருந்தவேளை, எதிரே இராணுவ வாகனமொன்று வேகமாக வருவதைக் கண்ட மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவர் - மணல்மேட்டுப் பக்கமாக அதனைச் செலுத்திச் சென்றார். பின்னால் இருந்த இருவரும் இராணுவ வாகனத்திலிருந்து தப்புவதற்காக கரையொதுங்கியபோது, எதிரே வேகமாக வந்த இராணுவ வாகனத்துக்குள் ஒருவர் அகப்பட்டுத் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். மற்றைய இருவரும் படுகாயமடைந்தனர்.

இவரது சடலம், சம்பவ இடத்திலிருந்து பொலிஸாரால் மந்திகை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு பிரேத பரிசோதனையின் பின் குடும்பத்தவரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

காயமடைந்த இருவரில் ஒருவர் மந்திகை வைத்தியசாலையிலும், மற்றவர் சாவகச்சேரி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினரின் ட்ரக் வாகனம் சம்பவ இடத்தில் நிற்காமல் தப்பிச்சென்று விட்டது.

நேற்றையதினம் மந்திகை வைத்தியசாலைக்குச் சென்ற பருத்தித்துறை மாவட்ட நீதிபதி அரியநாயகம் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டதுடன், தப்பிச் சென்ற இராணுவ வாகனத்தைக் கண்டுபிடிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டதுடன், எதிர்வரும் புதன்கிழமை காயமடைந்த இருவரையும் நீதிமன்றுக்கு ஆஜராகுமாறு பணித்தார். (13)

# மாகாண மட்டத்திலான..

ரணில் அறிவித்துள்ளதாகவும், ஜனாதிபதி சந்திரிகாவுடனும் இது தொடர்பாகப் பேசவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாகாண சபைகளுக்கான சட்டத்தில் சில திருத்தங்களை இந்த மாதம் 26 ஆம் திகதி பிரதமர் ரணில் கொண்டுவர எண்ணியுள்ளதாகவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான தீர்மானங்கள் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த கட்சித் தலைவர்களுடனான கூட்டத்தில் எடுக்கப்பட்டதோடு, இரண்டு வாரங்களுக்குள் இது தொடர்பான சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்களான கரு ஜெயசூரிய, ஜீ.எல். பீரிஸ், மஹிந்த சமரசிங்க, ரவூப் ஹக்கீம் மற்றும் ஜே.வி.பியின் நந்தன குணதிலக, மக்கள் ஐக்கிய விடுதலை முன்னணியின் தினேஸ் குணவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, ராஜ கொலுரே ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

அத்துடன், இந்தக் கூட்டத்தில்-தற்போதுள்ள மாகாண சபைகளின் அங்கத்தவர் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டுமெனவும் கோரப்பட்டது. ஆனால், இந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதைவிட தற்போது உள்ளவர்களின் வேலைத்தரத்தை அதிகரித்து அதன்மூலமான பலன்களையும் உச்சமாகப் பெறவேண்டுமென பிரதமர் ரணிலும் மஹிந்த ராஜபக்ஷவும் தெரிவித்தனர்.

ஆனால், இவற்றையெல்லாம் விடுத்து ஜனாதிபதியும், பிரதமரும் ஒன்றாக இணைந்து நாட்டை ஒரு நல்லநிலைக்கு இட்டுச்செல்ல வேண்டுமென வர்த்தகப் பிரமுகர்களும் மற்றும் தனியார் துறையினரும் வேண்டுகோள் விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை சிவனேஸ்வரன்

### (மனோகரன்)

நெல்லியடி இராணி மில் ஒழுங்கையைச் சேர்ந்த சின்னத்துரை சிவனேஸ்வரன் (10.01.2004) அகால மரணமானார்.

அன்னார் சின்னத்துரை மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் சிவசக்தியின் அன்புக் கணவரும் சிந்துவின் அன்புத் தந்தையும் கந்தசாமி, தர்மலிங்கம், தங்கமணி (அமரர்), நகுலேஸ்வரன் மற்றும் கிருஸ்ணன், லலிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் (12.01.2004) இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் ஆலங்கட்டை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராணி மில் ஒழுங்கை*
*நெல்லியடி,*
*கரவெட்டி.*

(சி-2103)

தகவல்:
**நகுலேஸ்வரன்**
**ஈசன்**
***(சகோதரர்)***

## திருமதி முத்துத்தம்பி சிவயோகம்

### (வேலணை)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துத்தம்பி சிவயோகம் (11.01.2004) நேற்றுக்காலை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற காலி வர்த்தகர் பொ.முத்துத்தம்பியின் அன்புத் துணைவியாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னையா தம்பதிகளின் மருமகளும் சிவபாக்கியம், இராசையா, கணபதிப்பிள்ளை, அன்னலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, இராசம்மா, பூரணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் திருமதி இ.இராஜேஸ்வரி, சண்முகராசா (**P.M & Sons Home needs**- காலி), மகேந்திரன் (அதிபர் - யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்), திருமதி தி.மகேஸ்வரி, செல்வராசா (**P.M & Sons Home needs**- காலி), திருமதி ம.நாகேஸ்வரி, யோகராஜா (அம்பாள் ரேடர்ஸ் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செ.இரத்தினம் (முன்னாள் உதவி அரசாங்க அதிபர் - வேலணை, இணைப்பாளர் - சிரான் - யாழ். மாவட்டம்), திருமதி ச.திருநிறைச் செல்வி, திருமதி ம.சாரதாம்பிகை, கலாநிதி செ.திருச்செல்வம் (விவசாய பீடம் - பேராதனைப் பல்கலைக்கழகம்), திருமதி செ.சந்திரவதனி, க.மகேந்திரலிங்கம் (துளசி மாளிகை, யாழ்ப்பாணம்), திருமதி யோ.பவானி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி லலிதா, திருமதி கவிதா, திருமதி யசோதா, செந்தூரன், செந்தில்மாறன், றமேஸ், சுரேஸ், றூபினி, தனுஜா, அபிநயா, சஞ்சீவன், தீபிகா, குவேந்திரன், கோகுலவாசன், துவாரகீசன், விதுசாயினி, துளசிதாசன், கஜரூபன், மதுரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வைஷ்ணவி, சேந்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் (12.01.2004) இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேலணை மேற்கு அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*230 A, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்*
*T.P : 021 222 3298*

(587)

தகவல்:
**மக்கள்,**
**மருமக்கள்.**

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.